விலை ரூபா: 8.00

*Registered as a News paper in Sri Lanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆடி 12 வியாழக்கிழமை (28.07.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 221

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

## கொழும்பில் நேற்று அதிகாலை தமிழ் இளைஞர் சுட்டுக்கொலை

(கொழும்பு)

கொழும்பு டாம் வீதியில் நேற்று அதிகாலை தமிழ் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். மட்டக்களப்பு சித்தாண்டியைச் சேர்ந்த கிருஸ்ணபிள்ளை கிருபா (வயது 24) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இவ் இளைஞன் வெளிநாடு செல்வதற்காக கொழும்பு டாம் வீதியில் உசைனியா ஒழுங்கையில் இருக்கும் விடுதி ஒன்றில் தங்கியிருந்தார் என்றும், நேற்று அதிகாலை ஒரு மணியளவில் குறிப்பிட்ட விடுதிக்கு வந்த இருவர் அவரை வெளியே அழைத்துவந்து துப்பாக்கியால் சுட்டு விட்டு தப்பிச் *(12 ஆம் பக்கம் பார்க்க)*

## ஈ.பி.டி.பி உறுப்பினர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு புறநகர் பகுதியில் ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் இரவு வீதியால் சென்றுகொண்டிருந்த சமயம் அவரை வழிமறித்த இருவர் சுட்டுவிட்டு தப்பிச்சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மோகன் எனப்படும் பாங்கிராசா ரமேஸ் (வயது 27) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தொழில் நிமிர்த்தம் வெளியேசென்ற அவர் வீட்டிற்கு திரும்பிக்கொண்டிருந்த சமயம் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. இவரது சடலத்தின் இடதுகண்ணிலும் காலிலும் துப்பாக்கிச்சூட்டுக் காயங்கள் காணப்படுவதாக பொலிஸார் மேலும் கூறியுள்ளனர். (ச-

### ஜனாதிபதித் தேர்தல்

## தபால் வாக்களிப்பிற்கான விண்ணப்பங்கள் பூர்த்தி!

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கு தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பப்பத்திரங்கள் அச்சடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தல் ஆணையாளர் அலுவலகம் விடுத்த கோரிக்கைக்கு ஏற்ப அரச அச்சகம் சுமார் 50 ஆயிரம் விண்ணப்பங்கள் அச்சிடப்பட்டு அனுப்பியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 1981 ஆண்டு 15ஆம் இலக்க ஜனாதிபதி தெரிவுச்சட்டம் தபால்மூல *(12 ஆம் பக்கம் பார்க்க)*

### தமிழர் தாயகத்திலிருந்து

# இராணுவம் உடனடியாக வெளியேறவேண்டும்

### வவுனியா பிரகடனத்தில் வலியுறுத்தல்

(நமது நிருபர்)

**எமது தாயக நிலத்தையும் கடலையும் ஆக்கிரமித்து நிற்கும் இராணுவம் எமது மண்ணை, கடலை விட்டு உடனடியாக வெளியேறவேண்டும். எமது நிலத்தில், எமது பலத்தில் எமது தலைவிதியை நாமே நிர்ணயித்துக்கொள்ளும் சூழ்நிலை உருவாகவேண்டும். அந்த உன்னதமான உயரிய சுதந்திர வாழ்வை நோக்கி தமிழ் மக்கள் அணிதிரண்டபடியே உள்ளனர் என வவுனியாவில் நேற்று நடைபெற்ற தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டின் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இந்த எழுச்சிப் பிரகடனத்தில், தமிழ் பேசும் மக்களின் அடிப்படை வாழ்வுரிமையையும் சுதந்திர வாழ்வையும் ஏற்றுக் கொண்டு மரபுவழித் தாயகம், தேசிய இனம், தன்னாட்சி என்பவற்றின் அடிப்படையில் தமது இறைமைக்கான போராட்டத்தையும் அங்கீகரிக்க வேண்டுமென்று சர்வதேச சமூகத்தை கோருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த பிரகடனத்தின் முக்கிய விபரம் வருமாறு:-

தென்னிலங்கையில் இன்று பயங்கரமான சிங்கள பௌத்த பேரினவாதம் தலைவிரித்தாடுகிறது. இது தமிழ்பேசும் மக்களின் *(12ஆம் பக்கம் பார்க்க)*

## முஸ்லிம் வர்த்தகர் நேற்றிரவு சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காத்தான்குடியில் முஸ்லிம் ஆயுதக் குழுவொன்றினால் வர்த்தகர் ஒருவர் நேற்றிரவு வீதியில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார். வெளிச்சம் மொஹிதீன் என அழைக்கப்படும் எம்.எம்.இப்ராஹீம் (வயது 52) என்பவரே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

வழமைபோல் தனது சப்பாத்துக்கடையை மூடிவிட்டு மோட்டார்சைக்கிளில் வீடுதிரும்பும் போதே இச்சம்பவம் இடம்பெற்றது. (ச-4)

## வவுனியாவில் நேற்று பிற்பகல் 3 குண்டுவெடிப்புச் சம்பவங்கள்

(வவுனியா)

தமிழர் விடுதலைப் பிரகடன மாநாடு நடைபெற்றவேளை வவுனியாவில் நேற்று குண்டுவெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றன. வவுனியா பிரகடன மாநாட்டை அண்மித்த

## சி.சு.கவின் ஜனாதிபதி வேட்பாளராக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நியமனம்

(கொழும்பு)

அறிவிப்பு இன்று அல்லது நாளை வெளி

குண்டுவெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றன. வவுனியா பிரகடன மாநாட்டை அண்மித்த பகுதியில் முதல் குண்டுவெடித்தது. மாலை 5.45 மணிக்கு கிளைமோர் ரகக் குண்டு ஒன்று அதே இடத்தில் வெடித்தது. மீண்டும் மாலை 6.15 மணிக்கு வவுனியாக் குருமண்காடு யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகம் அருகே மூன்றாவது குண்டுவெடித்தது. மூன்று குண்டுவெடிப்புக்களிலும் எதுவித சேதமும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

தமிழர் மாநாட்டை சீர்குலைக்கும் வகையில் இத்தாக்குதல் குண்டுவெடிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. மாநாட்டில் பங்கேற்ற அனைத்துப் பிரதேச தமிழினப் பிரதிநிதிகளும் இதற்கு கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர். (ச-4)

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவுசெய்வதற்கான கூட்டத்தின்போதே பிரதமர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்று அல்லது நாளை வெளியிடப்படுமென சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை அடுத்த பிரதம மந்திரி வேட்பாளராக அனுரா பண்டாரநாயக்க தெரிவுசெய்யப்பட்டுள்ளார். ஜனாதிபதித் தேர்தலில் வென்று மகிந்த ராஜபக்ஷ பதவியேற்றால் அவரின் பிரதமர் பதவியை அனுரா பண்டாரநாயக்க பெற்றுக்கொள்வார். (ச-8)

# மேவின் சில்வாவிற்கு எதிராக கொழும்பில் நேற்று ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஊடகவியலாளர்களையும், ஊடகங்களையும் பிரதி அமைச்சர் மேவின் சில்வா தரக்குறைவாகவும், தகாதவார்த்தைகளாலும் பேசியமை மற்றும் அச்சுறுத்தியமையையும் கண்டித்து கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை சுதந்திர ஊடக இயக்கம், தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் மற்றும் முஸ்லிம் மீடியா சங்கம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பெருமளவான ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டு தமது எதிர்ப்பினை வெளிக்காட்டினர். அதில் கலந்துகொண்டவர்கள் மேவின் சில்வாவின் செயலைக் கண்டிக்கத்தக்க வாசகங்களை ஏந்தியவாறு காணப்பட்டதுடன், மேவின் சில்வா ஊடகங்களிடம் மன்னிப்புக்கோர வேண்டுமென்றும் கோரிக்கைவிடுத்தனர்.(ச)

# எழுச்சியுடன் நடைபெற்ற வவுனியா பேராளர் மாநாடு

(வவுனியா)

தமிழர் தாயகத்தின் விடுதலைப் பிரகடனத்திற்கு கட்டியம் கூறுகின்ற இரண்டாவது வட்டுக்கோட்டை மாநாடு என்று அழைக்கப்படுகின்ற வவுனியாப் பிரகடன மாநாடு நேற்றுப் பேரெழுச்சியோடு வவுனியாவில் நடைபெற்றது.

வவுனியா வைரவப் புளியங்குளம் சிறுவர் பூங்கா மைதானத்தில் நேற்றுக்காலை 10.30 மணிக்கு இம்மாநாடு தொடங்கியது. வடக்குக் கிழக்குப் பிரதேசங்களிலிருந்து பெருமளவான பேராளர்கள், பிரதிநிதிகள் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

திருகோணமலை மாவட்ட தமிழ்மக்கள் பேரவையின் தலைவர் விக்னேஸ்வரன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. நிகழ்வின் தொடக்கத்தில் பொதுச்சுடரினை கரும்புலி லெப்.கேணல் போர்க்கின் தாயார் திருமதி மாப்பாணப்பிள்ளை ஏற்றினார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மனித உரிமை மீறப்படுவதாக ம.உ.ஆணைக்குழுவிடம் புகார்

(யாழ்ப்பாணம்)

டிப்ளோமா கற்கைநெறியைத் தொடர்வதற்கு சம்பளமற்ற கற்கை விடுமுறை வழங்கப்படும் என வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அறிவிப்பதற்கு முன்னரே கல்விப்பணிப்பாளர்களில் சிலர் கடந்த மார்ச் மாதத்திலிருந்து தமது சம்பளத்தை நிறுத்தியுள்ளதாக யாழ்.பல்கலைக் கழகத்தில் பட்டப்பின் கல்வி (முழுநேர) டிப்ளோமா பாடநெறியை மேற்கொள்ளும் ஆசிரியர்கள் கடந்த திங்கட்கிழமை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடொன்றைச் செய்துள்ளார்கள்.

இவ்விடயம் தொடர்பாக வடக்கு - கிழக்கு ஆளுநருக்கும் தெரியப்படுத்தியுள்ளதாகவும் அம்முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக நடவடிக்கைகளும், சம்பளம் நிறுத்தப்பட்டமையும் ஆசிரியர்களாகிய தங்களது அடிப்படை மனித உரிமை மீறும் செயலாகும் என அவர்கள் தமது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளனர்.

இவ் விடயம் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் கல்வி அமைச்சுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுத்துவருகிறார். (து-19)

# பனம் வெல்ல உற்பத்தி வீழ்ச்சி

(திருநெல்வேலி)

யாழ்.மாவட்டத்தில் உள்ள சீவல் தொழிலாளர்களில் 65 வீதமானோர் இடைவிலகியுள்ளனர். கடந்த கால யுத்த நடவடிக்கைகளின் போது சீவல் தொழிலாளர்களில் 78 வீதமானோரிற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மறுவாழ்வுபற்றி இலங்கை அரசாங்கம் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வியலை மேம்படுத்தி அவர்களிற்கு உதவுவதன் மூலம் மீண்டும் அவர்களை சீவல்தொழிலில் ஈடுபடவைக்க முடியும் எனவும் பனைதென்னை வள ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பனை, தென்னை என்பவற்றில் இருந்து எடுக்கப்படும் கருப்பணி மூலம் உற்பத்தியாகி வந்த பனம் வெல்ல உற்பத்தியிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. முன்பு வருடம் ஒன்றிற்கு இருபத்தி ஐயாயிரம் கிலோ பனம் வெல்லம் உற்பத்தி செய்யப்பட்டதாகவும் தற்போது பத்தாயிரம் கிலோவிற்கு உட்பட்ட உற்பத்தியே இடம் பெறுவதாகவும் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. (அ-43)

# தடைகளைத் தாண்டி சமாதானத்தை —ஏற்படுத்த ஜனாதிபதி உறுதி—

(கொழும்பு)

நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமென்பதில் ஜனாதிபதியின் தலைமையிலான கூட்டமைப்பு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

புத்தளத்தில் இடம்பெயர்ந்த முஸ்லிம்களுக்கான செயலகத்தை நேற்றுமுன்தினம் திறந்து வைத்து உரையாற்றும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

பிரதமர் தொடர்ந்து பேசுகையில், நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டுமென்பதில் சகலரும் ஆர்வத்துடன் இருக்கின்ற வேளையில் அரசாங்கம் தங்கு தடையின்றி சமாதானத்தை ஏற்படுத்த கடும் முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றது என்றும், சமாதானத்தை ஏற்படுத்த எத்தகைய தடைகள் வந்தாலும் அத்தகைய தடைகள் எல்லாவற்றையும் முறியடித்துச் சமாதானத்தை ஏற்படுத்த ஜனாதிபதி தன்னாலான சகல முயற்சிகளையும் மேற்கொள்ளுவார் என்றும் கூறினார்.

வடபகுதியிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சகலவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் தற்போது வசித்துவரும் பகுதிகளில் தொழில் வாய்ப்பைப்பெறுவதில் எதிர்கொள்ளும் சவால்களை நீக்கி அவர்களுக்கு நியாயமான தீர்வைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மீள்குடியேற்றம், முஸ்லிம் மாணவர்களின் கல்வித் திட்டம் என்பன குறித்தும் அரசாங்கம் கவனம் செலுத்தும் என்றும் பிரதமர் மேலும் தெரிவித்தார். (து-08)

# புகையிலை பாவனைத் தடை சட்டமூலம் தயாராகிறது

(கொழும்பு)

புகையிலை கட்டுப்பாட்டு சட்டமூலத்துக்கான சட்ட வரைவை எதிர்வரும் மாதம் சட்டமா அதிபருக்கு சமர்ப்பிக்க சுகாதார அமைச்சு எதிர்பார்த்துள்ளது.

சட்டமா அதிபரின் அங்கீகாரம் கிடைத்ததும் சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

புகைத்தலைத் தடுப்பதற்கான மற்றுமொரு நடவடிக்கையாக இந்த சட்டமூலம் இயற்றப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புகையிலை வரிமூலம் அரசாங்கத்திற்கு பெருந்தொகையான நிதி கிடைத்தபோதிலும் அதனைவிட கூடுதலான தொகை புற்றுநோயாளர்களின் சிகிச்சைக்காக செலவிட நேரிடுவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

## அறநெறிப் பாடசாலை

(மருதங்கேணி)

மேலைப்புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை சிக்கனகடன் உதவி கூட்டுறவு சங்கம் அண்மையில் அறநெறிபாடசாலை ஒன்றை ஆரம்பித்துள்ளது.

மேற்படி பாடசாலையின் ஆரம்ப விழா சங்கத் தலைவர் சோ.கங்காதரன் தலைமையில் நடைபெற்றது.

இவ் ஆரம்பவிழாவில் வடமராட்சி வடக்கு பிரதேசசெயலக கலாசார உத்தியோகத்தர் சுகுணா, கனடா வேதாந்த ஞான மன்றத்தின் இலங்கைக் கிளை தலைவர் இராசையா ஸ்ரீதரன், சிவத்திரு. இராசையா குருக்கள் ஆகியோர் ஆன்மீக கருத்துரைகளை வழங்கினர். (அ-35)

## கூட்டுறவு தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் 83 ஆவது சர்வதேச கூட்டுறவு தினவிழா எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் யாழ்.மா.கூ.சபைத் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் இடம்பெறவுள்ளது. (ந-2)



வெள்ளெருவைப் பிள்ளையார் ச.ச.நிலைய முன்பள்ளி விளையாட்டு விழா நிகழ்வல் நடைபெற்ற பழைய மாணவர்களுக்கான கயிறு இழுவைப் போட்டியில் முதல் இடத்தைப் பெற்ற அணியினருக்கான பரிசினை வலி.கிழக்குப் பிரதேச சபைச் செயலர் த.நடராசா அணித் தலைவர் ஆ.கண்ணனிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (படம் : கோப்பாய் நிருபர்)

## இராசி பலன்

28.07.2005

(ஆடி 12, வியாழக்கிழமை)

அட்டமி பின்னிரவு 2.23 மணிவரை

அச்சுவினி முன்னிர்வு 6.40 மணிவரை

இராகுகாலம் 1.32 - 3.02 மணிவரை

சுபநேரம் 7.32 -9.02 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | நல்ல முயற்சி, உறவினர் சந்திப்பு, போசன சுகம், சிந்தனை மிகுதி. |
| இடபம் | காரிய அலைச்சல், பண விரயம், உறவினர் வெறுப்பு, அமைதிக்குறைவு. |
| மிதுனம் | நல்ல காரியம், சகோதரர் உதவி, கீர்த்தி, நல்ல வருமானம். |
| கடகம் | கடின முயற்சி, நண்பர்கள் உதவி, போசன நன்மை, அதிகாரம். |
| சிங்கம் | புதியதிட்டமிடல், எதிர்பாராத செலவு, கட்டுப்பாடு, திடீர் பயணம். |
| கன்னி | அபகீர்த்தி, காரியதாமதம், பிரயாண பயம், உடல்நலக் குறைவு. |
| துலாம் | குடும்ப மகிழ்ச்சி, எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, பெருமையடைதல். |
| விருச்சிகம் | ஆரோக்கிய நிலை, தொழில் விருத்தி, சுவாரஸ்யம், சத்துரு ஜெயம். |
| தனுசு | புத்திரரால் கவலை, காரிய தாமதம், போசன சுகக் குறைவு, பூர்வபுண்ணிய கருமம். |
| மகரம் | மனச்சஞ்சலம், சுபசெலவு, முயற்சி தாமதம், வாகன சுகம். |
| கும்பம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், பெருமையடைதல், உறவினர் வருகை, போசன சுகம். |
| மீனம் | கோபப்படுதல், பணவிரயம், முயற்சி தாமதம், குடும்பக் கவலை. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.

- வளவன்

# தேசிய கலை இலக்கியப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

வலி.தெற்குப் பிரதேச செயலகத்தால் நடாத்தப்பட்ட தேசிய கலை இலக்கியப் பெருவிழாப் போட்டிகளில் பங்குபற்றி 1,2,3 ஆம் இடம் பெற்றவர்களினுடைய பெயர் விபரங்கள் வருமாறு:

(கட்டுரை வரையறைக்குட்பட்டது.)

**சிரேஷ்ட பிரிவு**

1 ஆம் இடம் - சி.லகிதா (இணுவில் இந்துக் கல்லூரி) 2 ஆம் இடம்-க.கணேந்தினி (இணுவில் இந்துக் கல்லூரி) 3 ஆம் இடம் - வி.மேரிதீபனா (உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்)

**கனிஷ்ட பிரிவு**

1 ஆம் இடம் - இ.திலீபன் (உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்) 2 ஆம் இடம் - ஆ.ருபனா (உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்) 3 ஆம் இடம் - த.சோபனா (மயிலங்காடு, ஏழாலை தெற்கு, ஏழாலை (ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்)

**கவிதை (திறந்த போட்டி)**

1 ஆம் இடம் - மாதுமை சிவாஜி (ஸ்கந்தவரோதயா கல்லூரி) 2 ஆம் இடம் - சீவரத்தினம் நிசாந்தி (இணுவில் இந்துக் கல்லூரி) 3 ஆம் இடம் - நடராசா சுனிதா (உடுவில் முருக மூர்த்தி வித்தியாலயம்)

**சிறுகதை (திறந்த போட்டி)**

1 ஆம் இடம் - சி.லகிதா (இணுவில் இந்து கல்லூரி) 2 ஆம் இடம் - தே.றஜிதா - (இணுவில் இந்து கல்லூரி) 3 ஆம் இடம் - ச.நளாயினி - (இல.81, மயிலணி, சுன்னாகம்)

**சித்திரம் (வரையறை, திறந்த) சிரேஷ்ட பிரிவு**

1 ஆம் இடம்-அ.காண்டீபன் (இணுவில் மத்திய கல்லூரி) 2 ஆம் இடம் - சி.துஷ்யந்தன் (இணுவில் இந்துக் கல்லூரி) 3 ஆம் இடம் - சி.வாகீசன் (இணுவில் மத்திய கல்லூரி)

**திறந்த போட்டி**

1 ஆம் இடம் - ப.நிஷாந்தன் (ஐயனார் கோவிலடி, சுன்னாகம்)

**கனிஷ்ட பிரிவு**

1 ஆம் இடம் - யோ.சிவேந்தன் (இணுவில் மத்திய கல்லூரி) 2 ஆம் இடம் - கு.தர்சிகா (வேம்படி மகளிர் உயர் தரப்பாடசாலை) 3 ஆம் இடம்- சி.கரிகாலன் (இணுவில் மத்திய கல்லூரி)

**நாட்டுப்புறப் பாடல் (வரையறை/திறந்த)**

1 ஆம் இடம் - த.தமிழினி (மாணிக்க தியாகராஜர் வீதி, சுன்னாகம்) 2 ஆம் இடம் - ச.தர்சனன் - கடவைப் புலம், சுன்னாகம்.

**சிரேஷ்ட பிரிவு**

1 ஆம் இடம் - கோ.ஹம்சத்வனி (யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)

**நடனம் (குழு)**

1 ஆம் இடம் - அபிநய கலாலயா நிறுவனம், சுன்னாகம்

**குறு நாடகம் (திறந்த)**

1 ஆம் இடம் - வீரவாகு இமாஜினி (ஸ்கந்தவரோதையா கல்லூரி) 2 ஆம் இடம் - க.கமலதாஸ் - (இணுவில் இந்துக்கல்லூரி) 3 ஆம் இடம் - வே.ரேகா- (ஸ்கந்தவரோதையா கல்லூரி) (அ)





கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் சனசமூக நிலைய முன்பள்ளி விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகிழக்குப் பிரதேச சபைச் செயலாளர் த.நடராசா மங்களவிளக்கேற்றுகின்றார். அருகில் சிவத்திரு. ச.சண்முகராஜேஸ்வரக் குருக்கள், நிலையத்தலைவர் மு.விக்னேஸ்வரன் ஆகியோரையும் விருந்தினர்களை பான்ட் இசையுடன் அழைத்துவர முன்பள்ளிச் சிறார்கள் தயார் நிலையில் நிற்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள் :- கோப்பாய் நிருபர்)

# சிவஸ்ரீ நா.யோகீஸ்வரக் குருக்கள் - சுபதாம்பிகை அம்மா தம்பதிகளின்

# பவள விழா

## நல்லை ஆதீன முதல்வரின் அருளுரை

அன்புசால் பெருந்தகையீர்,

சிவஸ்ரீ நா.யோகீஸ்வரக் குருக்கள் இன்று தமது எழு பத்தைந்தாவது அகவை நிறைவைத் தமது குடும்ப சமேதராகக் கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின் றோம். குருத்துவ பரம்பரையில் தோனறிக் குருவாகவும, வழிகாட்டியாகவும், சிந்தனையாளராகவும் தெளிந்த மனம் உடையவராகவும் விளங்குகின்றவர் அவர்.

எடுக்கின்ற விடயங்களைச் சிறப்பாக நிறைவேற்ற வேண்டும் என்பதில் மன விருப்பம் உடையவர். எல்லோருட னும் இனிமையாகப் பேசி அந்தணருக்கே உரித்தான ஓதல, ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் ஆகிய ஆறு கடமைகளையும் சிறப்பாகச் செய்யும் குருவாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார். பல ஆலயங்களின் சமய நிகழ்ச்சிக ளையுமஅ கும்பாபிஷேக விழாக்கள், மஹோற்சவங்கள ஆகியவற்றைச் சிறப்பாக நடத்தி மக்களின் ஆத்மீக வளர்ச்சிக்குப் பணியாற்றி வருகின்றார்.


யோகீஸ்வரக்குருக்கள் தம்பதிகள் இன்று எழுபத் தைந்து வயதை அடைந்து பீமரத சாந்தி என்னும் யாகத்தினூடாக இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து இறைபணியாற்ற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்க வளமுடன்

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

*நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன*
*குருமஹா சந்நிதானம்,*
*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த*
*பரமாச்சாரிய சுவாமிகள்.*

**இன்று பீமரத சாந்தியும் பவள விழாவும், நூல்வெளியீடும் அத்தியடி கணபதி கலாசார மண்டபத்தில் நடைபெறுகிறது.**



## ச.மஹேஸ்வரக் குருக்களின் வாழ்த்துரை

தமிழும் சைவமும் தழைத்தோங்கும் சப்த தீவுகளின் மத்தியில் இருதய ஸ்தானமாகவும் சிகரம் போலவும் விளங்குகின்ற வேலணை மாநகரில் நாரந்தனை என்னும் கிராமத்தில் கந்தன் அருளால் முப்பொழுதும் இறைவன திருமேனி தொட்டுப் பூசை செயது வந்த நாகலிங்க ஐயா- சின்னம்மா தம்பதிகட்குக் கனிஷ்ட புத்திரராக உதித்த வர்தான் இன்று பவளவிழாக் காணும் நாயகன். இவர் இளம் வயதிலே தமிழும், சமஸ்கிருதமும் கற்றுக் குருத்து வத்தைச் செய்ய ஆரம்பித்தார்.

மேலும் இளம்பராயத்தில் நாராயண சாஸ்திரிகளி டம் சமஸ்கிருத பாஷை, இலக்கியம், நீதி சாஸ்திரம், சோதிடம் போன்ற தனது குருத்துவத்திற்குத் தேவையான அறிவை விளங்கிக் கற்றுக்கொண்டவர். பல பெரியார்கள, ஆசிரியர்கள் போன்றோரிடம் சென்று தமது ஓய்வு நேரங்க ளில் புராணப் படிப்பு, பயன் போன்றவற்றையும் கற்று இன்று சிறந்த தமிழ் விற்பன்னராகவும் திகழ்கின்றார்.

இவர் எமது சகோதரியைக் கரம்பிடித்து ஐம்பது வருடங்களுக்கு மேலாக நல்ல பிள்ளைகள், பேரப்பிள்ளை கள், பீட்டப்பிள்ளையுடன் சிறந்து வாழ்வதற்கு இவருடைய நற்குணம், நற்செயல், நற்சிந்தனை, தெய்வீகப் பற்று, நற்பண்பு, நல்லொழுக்கம், கருணை, கடமை, கண்ணி யம், இரக்கம் போன்ற குணாதிசயங்கள் அமைந்ததே காரணமெனச் சொல்லலாம்.

மேலும் இவர் ஈழநாட்டின் பல மூத்த சிவாச்சார் யர்களின் அன்பையும் பாராட்டையும் பெற்று இன்று மூத்த சிவாச்சார்யராக விளங்குவதும் நினைவுகூரக்கூடி வை. இவர் நயினை சுவாமிநாதக் குருக்கள், ஐகைலாசநாதக் குருக்கள், இணுவில் இராமநாதக் குருக்கள், ஊரெழு சோமசுந்தரக் குருக்கள், பாலசுந்தரக் குருக்கள், சுரு வில் நடராசக் குருக்கள் போன்ற மூத்த சிவாச்சார்யர்களின் பிரதம சிஷ்யராக நடந்து அவர்களுடைய சரியை, கிரியை, ஞானம், நடை, உடை, பாவனை முதலியவற்றையெல் லாம் கசடறக்கற்று அதன்வழி இன்றும் மிகச் சிறப் பாகக் கிரியைகளை மிக பக்தியோடு செய்து வருவ தும் கவனிக்கப்பட வேண்டிய ஓர் அம்சமாகும்.

இவர் நூற்றுக்கு மேற்பட்ட கும்பாபிஷேகங்கள், மஹோற்சவங்கள், சங்காபிஷேகங்கள் பலவற்றைத் தனித்தும் கூட்டாகவும் நிகழ்த்தியுள்ளார். அதேபோல பல ஆலயக் கிரியைகளையும் தனித்தும் கூட்டாக வும் செய்யும் திறமைசாலியாவார். அதுமட்டுமல்ல, சமயச் சடங்குகளைச் செய்வதிலும் மிக்க ஆர்வமுள்ள வராகச் சிறந்து விளங்குகின்றார். பல சிஷ்யர்களுக்கு விவாகம், ஆசாரியபிஷேகம், சஷ்டியப்த பூர்த்தி விழா போன்ற வைபவங்களையும் நடத்திவைத்த பெருமை இவருக்கு உண்டு. இத்தகைய பெருமை கொண்ட மகானை வாழத்துவதற்கு நான் மிகவும் பெருமைப்படுகின்றேன.

இவர் சிரஞ்சீவியாய் சதாபிஷேகம் வரை சுகதேகி யாக வாழ்ந்து மேலும் பல்லாண்டு பல்லாண்டு காலம் வாழ்ந்து சமய சமூக சேவைகளை ஆற்றவேண்டுமெனறு அம்பிகையை வணங்கி வாழ்த்தி ஆசி கூறுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

'தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று'

தீர்க்காயுஷ்மான் பவ. சர்வமங்களம் உண்டாகட்டும்.

*சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி*
*கிரியாகலாப முக்தாமணி*
*சிவஸ்ரீ ச.மஹேஸ்வரக் குருக்கள்*

## சிவாசார்யமணி சிவஸ்ரீ நா.யோகீஸ்வரக்குருக்கள்

சைவமும் தமிழும் தழைத்து வளர்ந்துள்ள யாழ்.நகரிலே சீரும் சிறப் பும மிக்க வேலணைப் பதியிலே சிவஸ்ரீ நாகலிங்கக் குருக்கள் - அம் மணி அம்மா தம்பதியினருக்கு 1928ஆம் ஆண்டு ஆனி மாதம் 18ஆம் திகதி கனிஷ்ட புத்திரனாக உதித்த சிவாச்சார்ய குருமணி யோகஸ வரக் குருக்கள் ஆரம்பக் கல்வியை சரவணை நாகேஸ்வரி வித்தியாலயத தில் ஆரம்பித்து இளமைப் பருவத்திலேயே சமஸ்கிருதமும் தமிழும் கற்றுத் தேர்ந்து 1961ஆம் ஆண்டு குருப்பட்டம் பெற்று தீவகத்தின் பிர பல்யமான ஆலயங்களில் கும்பாபிஷேகங்களையும் மகோற்சவங்களை யும் பிரதம சிவாச்சார்யராகவும் சர்வ போதகாசிரியராகவும் இருந்து நடத் திய பெருமைக்குரியவர்.

அன்றும் சரி இன்றும் சரி பல ஆலயங்களில் நித்திய, நைமித்திகக கிரி யைகள, பிரதிஷ்டா கும்பாபிஷேகங்கள், மஹோற்சங்கள் மற்றும் பல கிரியைகளை சிரேஷ்ட சிவாச்சார்யர்களோடு இணைந்தும் பிரதிஷ்டா பிரதம குருவாக இருந்தும் நடத்திய, நடத்துகின்ற பெரும பேறு பெற்றவர்.

1950 ஆம் ஆண்டு புங்குடுதீவு ஜம்புகேஸ்வரக் குருக்கள் தம்பதிக ளின் மகள் சுபதாமபிகையைத் திருமணம் செய்து, இல்லறமாகிய நல்ல றத்தை மேற்கொண்டு மக்கள் செல்வங்களையும் பேரப்பிள்ளைகள், பூட் டப்பிள்ளைகளையும் கண்டவர்.

நற்குணம், நற்செயல், நற்சிந்தனை, தெய்வீகப் பற்று, நற்பண்பு, நல் லொழுக்கம், கருணை, கடமை, கண்ணியம், இரக்கம் போன்ற குணாதிசயங் களைக் கொண்ட இவர், பவள விழா ஆண்டையும கடந்து எழுபத்தெட் டாவது அகவையிலும் தமது சமயப் பணிகளைத் தளராது செய்து வரு வது சைவத் தமிழ்க்குலம் செய்த பூர்வ புண்ணிய பலனாகும்.

இவர் நூற்றுக்கு மேற்பட்ட கும்பாபிஷேகங்கள், மஹோற்சவங்கள், சங்காபிஷேகங்களையும் தனித்தும் கூட்டாகவும் நடாத்தியுள்ளார். அதேபோல பல ஆலயக் கிரியைகளையும் தனித்தும் கூட்டாகவும் செய்யும் திறமைசாலியுமாவார். பல சஷ்யர்களுக்கு விவாகம், ஆசாரிய பிஷேகம், சஷ் யப்த பூர்த்தி விழா போன்ற வைபவங்களை நடாத்தி வைத்த பெருமையும் இவருக்குண்டு.

இவருக்கு சர்வபோதகாசிரியர், தானக் கிரிகை ரத்தின சோதி, வேதாகம உத்தம ஆச்சாரிய சாரதா, சிவாச்சாய மணி முதலிய பட்டங்கள் வழங் கப்பட்டுள்ளன. 2003ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற இந்து மாநாட்டில் மூத்த சிவாச்சாரியர் என்ற பட்டம் வழங்கப்பட்டது.

## தா.மஹாதேவக் குருக்களின் பாராட்டுரை

யாழ்ப்பாணத்தின் சைவத் தமிழ்ப் பண்பாட்டுச் சிறப்பினை நாம் தீவுப்பகுதிகளில் நன்கு தரிசிக்கலாம். அதிலும் வேலணை மிகச் சிறப்பான ஓரிடமாகும். வேலணை செய்த தவப்பயனாக அங்கு தோன்றியவர்தான் பல்வேறு சிறப்புக்களும் ஒருங்கே சேரப் பெற்றவரான சிவஸ்ரீ நா.யோகீஸ்வரக் குருக்கள் அவர்கள்.

இளமையிலேயே தமிழும் வடமொழியும் நன்கு கற்றுணர்ந்து குருத்துவப் பணியில் ஈடுபட்டுப் புகழ் பெற்ற சிவாச்சார்யப் பெருந்தகைகளுடன் இணைந்து பல்வேறு இடங்களிலும் பணிசெய்து தம்மை நன்கு வளர்த்துக்கொண்டவர் அவர்.

குருக்களவர்களின் பிள்ளைகளும் அவர் வழியி லேயே சிறந்த குருத்துவப் பணிகளிலே ஈடுபட்டுவருவது அவருக்குப் பெருமை சேர்ப்பதாக அமைகிறது.

இன்று அவரது மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளை கள் யாவரும் இணைந்து அவரது பவளவிழாவையும் சாந்தி கர்மாக்களையும் விமரிசையாகக் கொண்டாடு கினற வேளையில் சிவாச்சாரியர்கள் யாவருக்கும் பயன் தரும் வகையில் ***பூர்வ சந்தானம்*** என்ற நிறைவான ஒரு கிரியா பத்ததி நூலினையும் வெளியிடுவது பாராட் டத்தக்கது.

இந்த நிறைவான நேரத்திலே சிவஸ்ரீ யோகீஸ்வரக் குருக்களும் அவரது குடும்பத்தினரும் எல்லா நலங் களும் பெற்று நீடூழி வாழவேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

*இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர்*
*சிவாகம ஞான பாஸ்கரன்*
*சிவஸ்ரீ தா.மஹாதேவக் குருக்கள்.*

**விமலா களஞ்சியம்**
General Merchants & Commission Agents
275, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
சித்தி விநாயகர் கிறீம் கவுஸ்
271, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். T.P:021-2222677

**நியூ பிரியங்கா ஜுவலர்ஸ்**
தரமான 22 கரட் தங்க நகைகளை பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஸ்தாபனம்
2-G, Stanly Road, Jaffna.

நவீன அழகிய சிங்கப்பூர் நகைகளுக்கு நீங்கள் நாட வேண்டிய ஸ்தாபனம்
**சிங்கப்பூர் ஜுவல்லறி**
22 கரட் தங்க நகைகள் விரும்பிய டிசைன்களில் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
சிங்கப்பூர் ஜுவல்லறி
95, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021-4590260

**ஆறுமுகம் ரெக்ஸ்ரைலஸ்**
20, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021-222 2740

**குமரன் போட்டோ**
Photographers
Videographers Album Makers & Communication
No.447, Stanly Road, Jaffna.
Tel: 021-222 7769, 0777 222601

**மயூரா கிப்ட் சென்ரர்**
Dealers in Fancy Goods, Gift Items, Eletronic, Electrical & House Hold Goods
No.14, New Market (out side) Power House Road, Jaffna. Tel: 021-222 2084

பசுவதை ஒழிப்போம்
தலைமை: **வேணி களஞ்சியம்**
165, K.K.S Road Jaffna.
கிளை: **வேணி ரான்ஸ் போட்டர்ஸ்**
72, SRIKATHIRASAN ST. Co-13.
கோகுல் 149, 4TH CROOSE ST. Co-11
கோகுலம் காப்போம்

## இன்று ஒரு தகவல்

### சண்டையை நிறுத்த சரியான மருந்து

ஒரு கணவன்-மனைவிக்கிடையில் எப்போதும் சண்டை வந்து கொண்டேயிருந்தது. இதில் என்ன ஆச்சரியம் என் கிறீர்களா? நான் அதற்காகச் சொல்ல வரவில்லை இது வேறு விடயம். அதாவது சண்டை பிடிக்காமல் இருப்பதற்கு வழி சொல்லும் தகவல் இது.

நான் சொன்ன அந்தக் கணவன் மனைவி எப்படியென் றால்... கணவன் ஒரு வார்த்தை சொன்னால்... மனைவியிட மிருந்து இரண்டு வார்த்தை பதிலாக வரும். இப்படி வார்த் தைகள் பெருகிப்போய் கடைசியில் வம்பில் வந்து முடி யும். மனைவி பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார்... அவரால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. பக்கத்து வீட்டிலும் ஒரு கண வன் மனைவி இருந்தார்கள். அவர்களுக்குள் சண்டை வரு வதில்லை. அது எப்படி அவர்களால் மட்டும் சண்டை பிடிக் காமல் இருக்க முடிகிறது என்று இவருக்கு ஆச்சரியம்.

ஒருநாள் நேராக பக்கத்துவீட்டு அம்மாவிடம் போய் "ஏன் அம்மா... நீங்கள் எப்படி கணவனும் மனைவியும் சண்டை போட்டுக் கொள்ளாமல் இருக்கிறீர்கள்... அது எப்படி முடி கிறது உங்களால் ?" என்று கேட்டார். "அதற்கென்ரு ஒரு மருந்து இருக்கிறது... அதை சாப்பிட்டால் சண்டை வராது" என்றார் அவர். "சரி... அந்த மருந்தை அவர் சாப்பிட மாட் டேன் என்று சொல்லிவிட்டால் என்ன செய்வது?" என்று கேட் டார் இவர். "அந்த மருந்து அவருக்கு இல்லை உனக்குத் தான்" என்றார் அவர்.

"அப்படியா... அப்படியென்றால் மிகவும் நல்லது. அதை எப் படி சாப்பிடுவது என்ற விபரத்தைச் சொல்லுங்கள்... எங்கே அது கிடைக்கும் என்பதைச் சொல்லுங்கள்" என்று கேட் டார் இவர். "வேறு எங்கும் போய் வாங்க வேண்டாம் என் னிடமே அந்த மருந்து இருக்கிறது. அதில் கொஞ்சம் தருகி றேன் வாங்கி வைத்துக்கொள். உன் கணவர் உன்னோடு சண்டையை ஆரம்பிக்கும் போதெல்லாம் நீ இந்த மருந் தில் ஒரு அவுன்ஸ் வாயில் ஊற்றிக்கொள்ள வேண்டும். அதை உடனே குடித்துவிடக்கூடாது. ஐந்து நிமிடமாவது வாயில் வைத்திருக்கவேண்டும். அதன் பின் குடித்து விட லாம்"என்று கூறி ஒரு போத்தல் மருந்தைக் கொடுத்து அனுப் பினார்.

மருந்தை எடுத்துக்கொண்டு இவர் வீட்டுக்கு திரும்பி வந் தார். வீடு பூட்டியிருந்ததால் கணவன் வந்து வாசலிலேயே காத்துக்கொண்டிருந்தான். மனைவியைக் கண்டதும் சண்டை பிடிக்க ஆரம்பித்துவிட்டான் "வீட்டைப் பூட்டிவிட்டு எங்கே போனாய்? எவ்வளவு நேரமாக ஒரு மனிதன் வாசலிலேயே காத்துக்கொண்டு கிடப்பது?" என்று. மனைவி இதற்கு பதில் கூறவில்லை... வீட்டைத்திறந்து சமையல் அறைக்குள் போனார்... ஒரு அவுன்ஸ் மருந்தை வாயில் ஊற்றிக்கொண் டார். அன்று மேற்கொண்டு சண்டை வளரவில்லை... நின்று விட்டது மருந்து பரவாயில்லை.

அதன் பின்பு பல சந்தர்ப்பங்களில் சண்டை வரக்கூடிய நேரங்களில் எல்லாம் இந்த மருந்து அதை நிறுத்தியிருக் கிறது. "பிரமாதமான மருந்தாக இது இருக்கிறது... இதைக் கொஞ்சம் அதிகமாகவே வாங்கி வீட்டில் வைத்துக் கொள்ள வேண்டியது தான்" என்று முடிவு செய்துகொண்டு இவரது மனைவி மறுபடியும் பக்கத்துவீட்டுப் பெண்மணியிடம் போனார். "எவ்வளவு விலையானாலும் சரி... நான் காசு கொடுத்து வாங்கி வைத்துக்கொள்கிறேன் எந்தக் கடையில் இது இருக் கிறது சொல்லுங்கள்" என்று கேட்டார். "இந்த மருந்துக்கு விலையே கிடையாது. இலவசமாகவே கிடைக்கும்" என் றார் அவர். "அது எப்படி விலையில்லாமல் இதை விற்க முடி கிறது?" என்று கேட்டார் இவர். "அது மருந்தாக இருந்தால் தானே விலை வேண்டும்? அது வெறும் தண்ணீர் தானே" என்றார். "வெறும் தண்ணீரா சண்டையை நிறுத்தியது?" என்று கேட்டார் இவர். "அது சண்டையை நிறுத்தவில்லை... உனது மௌனம் தான் சண்டையை நிறுத்தியது. நீ வாயில் தண்ணீர் வைத்திருப்பதால் எதிர்த்துப் பேசுவதில்லை. அத னால் உன் கணவனின் கோபம் சாந்தமாகிவிட்டது" என்றார் அவர்.

இந்தக் கதையில் இருந்து சண்டையை நிறுத்தும் மருந்து எது என்று தெரிந்து கொண்டீர்களா? இதை நானும் தெரிந்து கொண்டு போத்தல்களில் ஊற்றி வைத்துக் கொண்டு என் னிடம் வருவோருக்கு சிபார்சு செய்திடலாம் என்று உட்கார்ந் திருந்தேன். ஒரு பெண்மணி வந்தார். "எனக்கும் என் கண வருக்கும் அடிக்கடி சண்டை வருகிறது" என்றார். "கவலைப் படாதே! நான் ஒரு மருந்து தருகிறேன்" என்று சொல்லி ஒரு போத்தலை எடுத்துக்கொடுத்தேன். அதில் இருப்பது தண் ணீர் என்று சொன்னால் அதன் மீது ஒரு மரியாதை வராது அல்லவா? அதனால் சொல்லவில்லை.

அந்தப் பெண்மணி வாங்கிக்கொண்டு போய் நான்கு நாட் கள் கழித்து திரும்பி வந்தார். "என்னம்மா... வீட்டில் சண்டை நின்று விட்டதா?" என்று கேட்டேன். "அங்கே நின்று விட் டது...இப்போது உங்களிடம் ஆரம்பம்" என்றார். "என்ன...?" என்றேன் பயந்து போய். "பின்னே என்ன...? நீங்கள் என்ன மருந்து கொடுத்தீர்கள்?" என்றார் கோபமாக. "அது வெறும் தண்ணீர் தானே" என்றேன். "தண்ணீரா இது? ... நன்றாகப் பாருங்கள்" என்று அந்தப் போத்தலை நீட்டினார். வாங்கிப் பார்த்தேன். அதன் பின் தான் விஷயம் புரிந்தது. நான் தவறுதலாக எங்கள் வீட்டில் இருந்த மண்ணெண்ணெய் போத்தலை அவரிடம் கொடுத்திருக்கிறேன்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# பிரதமர் மீதான கையாடல் குற்றச்சாட்டுகள் விசாரணைகளில் நிரூபிக்கப்படவில்லை

## -பொலிஸ் தரப்பு செய்தியென ரொய்ட்டர்

(கொழும்பு)

சுனாமி உதவியாகக் கிடைத்த வளத்தினை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கையாடினார் என்ற குற்றச்சாட்டுகள் பற்றிய விசாரணைகளில் எது வித முறைகேடுகளும் இடம்பெற்றிருப்பதாகத் தெரியவில்லை என்று பொலிஸ் தரப்புச் செய் திகள் தெரிவித்ததாக ரொய்ட்டர் செய்தி வெளி யிட்டுள்ளது.

குறித்த பணம் இன்னமும் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருப்பதாகவும் எதுவித கையாள்கையோ குற்றச்செயல்களோ இடம்பெற் றதற்கான தடயங்கள் எதுவும் இல்லை எனவும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் மேலதிகாரி ஒருவர் தெரிவித்ததாக அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நிவாரணமாகக் கிடைத்த பெரும் தொகையில் இருந்து 8 கோடி 30 இலட்சம் ரூபாவினை கையாட முனைந் ததாகவும் இந்தத் தொகையினை அவரது செயலாளர் அம்பாந்தோட்டை மாவட்டத்தை கட்டி யெழுப்பும் நிதியத்திற்கு மாற்றியிருந்ததாகவும் ஐக்கிய தேசியக் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுகள் பற்றி விசாரிக்கும் சி.ஐ.டி. உத்தியோகஸ்தர்கள் பலரை விசா ரணைக்கு உட்படுத்தியிருக்கின்றார்கள். விசா ரணை அறிக்கை விரைவில் சட்டமா அதிபரிடம் கையளிக்கப்படும். குற்றச்சாட்டுகள் பற்றி கருத்துத் தெரிவித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இவ்வாறான மோசடிக் குற்றச்சாட்டுகள் தனது அரசியல் வாழ்க்கையினை சீர்குலைக்கும் நோக்கிலேயே சுமத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

தமக்குக் கிடைத்த உதவிகள் பற்றி கடந்த பெப்ரவரி முற்பகுதியில் அமைச்சரவைக்கு அறிவித்திருந்ததாகவும் அவர் தெரிவித்ததாக ரொய்ட்டர் தனது செய்தியில் மேலும் தெரி வித்துள்ளது. (ற-4)

# தேர்தலை இவ்வாண்டு நடத்தாவிடின் ஆட்சிக் கவிழ்ப்பு உறுதி -ஜீ.எல்.பீரிஸ்

(கொழும்பு)

ஜனாதிபதி இந்த ஆண்டே தேர்தலை நடாத் தாவிட்டால் ஆளும் அரசு கவிழ்க்கப்படுவது உறுதி என்று ஐக்கிய தேசியக்கட்சி எச்சரிக்கை விடுத் துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே ஐக்கிய தேசி யக் கட்சியின் பேச்சாளர் ஜ.எல்.பீரிஸ் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் கருத்துக் கூறுகையில், தேர்தல் திகதியை அறிவிக்கும் கடமை தேர் தல் ஆணையாளருக்கு உண்டு. அவர் மக்களின் அதிகாரி அரசியல்வாதி அல்ல. எவரிடமும் ஆலோ சனை பெறவேண்டிய அவசியம் அவருக்கு இல்லை. அவர் நேர்மையாக நடந்துகொள்வார் என்று எதிர் பார்க்கிறோம்.

ஜனாதிபதித் தேர்தலை இந்த ஆண்டே நடத்தக் கோரி நாடு முழுவதும் கையெழுத்து இயக்கம் நடத்தப்படும். ஐக்கிய தேசியக் கட்சி வசமுள்ள அனைத்து மாகாண சபைகளிலும் இத் தீர்மானம் நிறைவேற்றப்படும்.



ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொறுப் பற்ற அறிக்கைகளை வெளியிட்டு வருகிறார், ஐந்து ஆண்டுகளுக்கு பொதுத்தேர்தலே வராது என்று அவர் கூறியிருக் கிறார். ஐந்து வாரங் களுக்குக் கூட நீடிக் காத நிலையில்தான் தற் போது அரசு இருக்கிறது. நவம்பர் மாதம் வரவு- செலவுத் திட்ட தாக்கலின் போது அரசு இதை உணர்ந்து கொள்ளும். எதிர்க் கட்சிகள் தான் நாடாளுமன்றத்தில் பெரும்பான் மையாக உள்ளன. இந்த ஆண்டே ஜனாதிபதித் தேர்தலை நடாத்தாவிட்டால் ஆட்சி கவிழ்க்கப்படும்.

ஒரு பக்கம் சர்வதேச சமூகத் தலைவர்களை உங்கள் வேலையைப் பாருங்கள் என்று அரசு கூறுகிறது. மறுபுறம் டோக்கியோ உதவி வழங் கும் 4 நாடுகளின் இணைத்தலைமை பிரதிநிதி களை ஜனாதிபதி அழைத்து பேச்சு நடாத்துகிறார். அரசு இப்படித்தான் இரட்டை வேடமிட்டு செயற் படுகிறது என்றார். (ற)

# பட்டதாரிகளுக்கான நியமனங்கள் ஆகஸ்ட் நடுப்பகுதியுடன் பூர்த்தி

## -பிரதி நிதியமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

பட்டதாரிகளுக்கு அரச துறையில் நிரந்தர வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுக்கும் முயற்சிகள் அடுத்த மாத நடுப்பகுதியளவில் முழு மையாகப் பூர்த்தியடையும் என பிரதி நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தின் மூலம் இந்த விட யம் பற்றி சகல அமைச்சுக்களின் செயலாளர் களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் ஆசிரியர் சேவையில் கூடுத லான பட்டதாரிகள் இணைத்துக் கொள்ளப்படவுள் ளனர். சமீபத்தில் நடந்த போட்டிப் பரீட்சைக ளில் சித்தி பெற்றவர்களின் தகைமைகளைக் கண்டறியும் நேர்முகப் பரீட்சைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

உள்ளூராட்சி அமைப்புக்களுக்கு பட்டதாரி களை நியமிப்பது தொடப்பான நேர்முகப் பரீட்சைகளை விரைவில் ஆரம்பிப்பதற்கு ஏற் பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சில அரச நிறுவனங்களிலும் அமைச்சுக் களிலும் புதிய பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டிருக்கிறது. 42 ஆயிரம் பட்டதாரி களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதே அரசாங் கத்தின் நோக்கமாகும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற-2)

# சர்ச்சைக்குரிய சுற்றுநிருபம் இரத்தாகும்வரை பல்கலை ஊழியர்களின் போராட்டம் தொடரும்

(கொழும்பு)

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் மேற் கொண்டுவரும் வேலை நிறுத்தத்தை சர்ச்சைக் குரிய சுற்றுநிருபம் இரத்துச் செய்யப்படும் வரை கைவிடப் போவதில்லை என்று இலங்கை 'நித கஸ்' சேவைகள் சங்கத்தின் பல்கலைக்கழக கூட்டு வர்த்தக தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த சுற்றறிக்கையின் மூலம் கல்விசாரா ஊழியர்களுக்கும் நிர்வாக உத்தியோகத்தர்க ளின் சம்பளங்களுக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தொழிற்சங்கத் தலை வர் பி.டி.பிரேமசிறி தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய அவர், 2003ஆம் ஆண்டு பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் மேற்கொண்ட வேலை நிறுத் தத்தைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட சுற்ற றிக்கை சம்பள முரண்பாடுகளுக்கான தீர்வைப் பெற்றுக் கொடுத்துள்ளது.

இருந்த போதிலும் இந்தப் புதிய சுற்றறிக் கையின் பிரகாரம் மீண்டும் சம்பள முரண்பாடு கள் தோன்றியுள்ளன என்று சுட்டிக்காட்டினார்.

மேலும் இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு பிரச்சினைக்கு துரித தீர்வு காணப் படவேணடும் என்றும் அவர் கேட்டுக்கொண் டார். (ற-2)

# தமிழகப் பயணம்

பயணக் கட்டுரை

# பராசக்தி படத்திற்கு கதைவசனம் எழுதியது கலைஞர் கருணாநிதி அல்ல

**என்.விஜயன்**

41 ஒரு நாட்டின் சிறந்த தலைமைத்துவத்திற்கு கர்மவீரர் காமராஜர் நல்லதோர் உதாரணம் என்றார் பேராசிரியர் லெனின்.

காமராஜர் பற்றிய தகவலுடன் கலைஞர் கருணாநிதி பற்றிக் கேட்டோம். கலைஞர் பற்றி சுட்டிக்கேட்டபோதிலும் பகுத்தறிவின் தந்தை ஈ.வே.ரா.பெரியார் முதல் தமிழகத்தின் இன்றுள்ள அரசியல்வாதிகள் வரை யாரையுமே பேராசிரியர் நல்லதாகக் கூறவில்லை.

சாதியத்தை ஒழிப்பதற்கு எந்த அரசியல்வாதிகளுமே உள்ளத் தூய்மையுடன் செயற்படவில்லை. தமது அரசியல் இலாபத்திற்காக சாதியம் ஒழிக்கப்படவேண்டுமெனக் கூறியிருந்தாலும், பிராமணியத்தின் மேலாதிக்கத்திற்கு உயர் சாதியினரின் மறைமுக ஆதரவு உள்ளதென்பது பேராசிரியர் லெனின் கருத்து.

## கலைஞர் முதல்வரானது எப்படி?

அறிஞர் அண்ணாத்துரை இறந்தபோது அடுத்த முதல்வராக யாரைத் தெரிவுசெய்வதென்பது பெரும் பிரச்சினையாக இருந்தது. அறிஞர் அண்ணாத்துரைக்கு ஈடான முதல்வர் ஒருவரை நியமிப்பதென்றால், அதற்குப் பொருத்தமானவர் நாவலர் நெடுஞ்செழியன் என்ற கருத்து திராவிட முன்னேற்றக் கழகத்திற்குள் வேகங்கொண்டிருந்தது.

எனினும், நாவலர் நெடுஞ்செழியனை முதலமைச்சராக்குவதற்குக் கலைஞர் கருணாநிதிக்கு விருப்பமில்லை. அண்ணாவுக்கு அடுத்த முதலவராக தான் வரவேண்டுமென்பதில் கலைஞர் உறுதியாக இருந்தார்.

அறிஞர் அண்ணாத்துரை இறந்தபோது, பெரியார் உயிரோடு இருந்தார். பெரியாருடன் ஏற்பட்ட சில முரண்பாடு காரணமாகவே அறிஞர் அண்ணாத்துரை அவரைவிட்டுப் பிரிந்து திராவிட முன்னேற்றக்கழகத்தை ஆரம்பித்தார். இருந்தும் பெரியாரின் அறிவியல் பாசறையில் பயின்ற அறிஞர் அண்ணாத்


பேராசிரியர் லெனின்

துரை, நாவலர் நெடுஞ்செழியன் போன்றவர்கள் பெரியாருடனான உறவைக் கைவிடவில்லை. இவ்வாறு பேராசிரியர் லெனின் கூறியபோது மற்றவர்கள் அறிந்துகொள்ளமுடியாத வகையில் எனக்குள் மெல்லிய சிரிப்பு ஏற்பட்டது. அந்தச் சிரிப்புக்குக் காரணமும் உண்டு.

யாழ்ப்பாணத்தில் ஒரு பத்திரிகையில் சேர்ந்து செய்தி சேகரிக்கும் பயிற்சியைப் பெற்றுவிட்ட பின்னர், அதிலிருந்து வெளியேறி இன்னொரு பத்திரிகையில் வேலைசெய்யும் நம் நன்றியுள்ள சகோதரர்கள் - அவ்வாறு வேலைசெய்யும் போது அவர்கள் குருவை மிஞ்சிய சிஷ்யர்களாகக் காட்டும் படம், இவற்றை நினைத்தபோதே அந்த மெல்லிய சிரிப்பு என்னுள் அரும்பியது.

அதேநேரம், பிரிந்துசென்றபோதிலும் தமக்கு அறிவியலைத் தந்த பெரியாரை மறக்காத அறிஞர் அண்ணாத்துரை, நாவலர் நெடுஞ்செழியன் போனறவர்களின் உயர்ந்த பண்புடமையை எண்ணிய கணத்தில் என் கன்னத்தின் ஓரங்கள் நனையவே செய்தன.

அந்த நினைப்புகளும், நிகழ்வுகளும் கணப்பொழுதில் நடந்துமுடிய,

பேராசிரியர் லெனினின் கருத்துக்கள் மீண்டும் என் செவிகளில் மோதிக்கொண்டன.

அறிஞர் அண்ணாத்துரை இறந்த பின்னர் நாவலர் நெடுஞ்செழியனை முதலமைச்சராக்குவதே பெரியாரின் விருப்பமாகவும் இருந்தது. ஆனால் அந்த நினைப்பை கலைஞர் கருணாநிதி தந்திரமாகத் தட்டிவிட்டு தன் நினைப்பை அரங்கேற்றிவிட்டார்.

பெரியார், அண்ணா, நாவலர் என்ற முதுபெரும் அரசியல் தலைமைகள் வியாபித்த பின்னரே, கலைஞர், எம்.ஜி. ஆர் போன்றவர்கள் திராவிட முன்னேற்றக்கழகத்தில் இணைந்துகொண்டனர். இவர்களுக்கும், கட்சியின் ஆரம்பகட்ட வளர்ச்சிக்கும் இடையே எந்தத் தொடர்பும் இல்லையென்பது பேராசிரியரின் ஆணித்தரமான முன்வைப்பு.

மேற்போந்த முடிவைப் பேராசிரியர் முன்வைத்போது எம்முடன் இருந்த ஒருவர் "பராசக்திப் படத்திற்குக் க்லைஞர் கதை வசனம் எழுதிய காலகட்டம்..." குறித்துப் பேராசிரியரிடம் கேட்டார்.

அநந்தக் கேள்விக்குப் பேராசிரியரின் பதில் உரை சிரிப்பாகவே இருந்தது. அந்தச் சிரிப்போடு, "பராசக்தி படத்திற்கு கலைஞர் கருணாநிதி கதை வசனம் எழுதியதாக யார் கூறினார்கள்?" இந்தக் கேள்வியை பேராசிரியர் லெனின் எம்மிடம் கேட்டார். அவரின் கேள்வி எமக்கு அதிர்ச்சியைத் தந்தது.

எங்களின் அதிர்ச்சியை உணர்ந்துகொண்ட அவர் மௌனத்தைக் கலைத்துக்கொண்டு பராசக்தி படத்திற்கு திரு. பத்மநாதன் என்பவரே கதை வசனம் எழுதினார். அந்தப் படத்திற்கான கதை வசனம் எழுதி பூர்த்தியடைந்த நிலையில் அறிஞர் அண்ணாவுக்கும் திரு. பத்மநாதனுக்கும் இடையே சிறிய கருத்துவேறுபாடு எழ, கதை வசனம் எழுதிய பத்மநாதன் தனது பணியைவிட்டு வெளியேறினார்.

இதனால் பராசக்தி படத்தை தயாரிக்க முடியாமல்போக, படத்திற்கான கதை வசனத்தை பூரணப்படுத்தும் பொறுப்பை கலைஞர் கருணாநிதியிடம் அண்ணாத்துரை ஒப்படைத்தார்.

ஆக, பராசக்தி படத்திற்கு மங்கலம் எழுதியது மட்டுமே கலைஞரின் வேலை. கதை வசனம் எழுதியது எல்லாம் திரு. பத்மநாதனே என்றார் பேராசிரியர் லெனின்.

(தொடரும்)

திரு. என்.விஜயன்
("தமிழகப் பயணம்" கட்டுரை ஆசிரியர்)
வலம்புரி,
யாழ்ப்பாணம்.

அன்புடையீர்,

முதற்கண் தங்களுக்கு வலம்புரி "தமிழகப் பயணம்" வாசகர் சார்பில் வணக்கங்களையும், வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக்கொள்வதில் மனம் மகிழ்கின்றேன்.

கலைகள் துள்ளி விளையாடும் தமிழக அழகுகளை நேரடியாகச் சென்று பார்க்கமுடியாத எம்போன்ற ஆர்வலருக்கு தங்கள் "பயணக் கட்டுரை" பெரும் வரப்பிரசாதமாகவே அமைந்துவிட்டது என்று கூறின் மிகையில்லை. 25.07.2005ஆம் திகதிய கட்டுரையில் "முரசொலி"யில் கலைஞரின் கடிதம் பற்றி எழுதியிருந்தீர்கள்.

கலைஞரின் தமிழில் எனக்கும்கூட அலாதிப்பிரியம். தாங்கள் அதுபற்றி எழுதியவுடன் உடனடியாகவே அதை வாசிக்கவேண்டும்போல் உள்ளது. கலைஞரின் தேனில் ஊறவைத்த செந்தமிழ்ச் சொற்கள் எனக்கு எப்போதுமே தெவிட்டுவதில்லை. ஆனாலும் அவை எம்போன்றோருக்கு அதிகம் கிடைப்பதில்லை. தாங்கள் கூறிய கலைஞரின் கடிதத்தின் சிறுபகுதியையாவது பிரசுரிப்பீர்களானால் பெருமகிழ்ச்சி அடைவேன்.

தி.உதயா
கைதடி

## கட்டடப் பொருட்கள் விற்பனைக்கு நாடுபூராகவும் விற்பனை நிலையங்கள்

### கட்டடப்பொருள் கூ.தாபனம் நிறுவும்

(கொழும்பு)

பலதரப்பட்ட விலைகளில் தரமுயர்ந்த கட்டடப்பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்யும் நோக்கத்துடன் இலங்கை கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் நாடுபூராகவும் விற்பனை நிலையங்களை ஆரம்பிக்க இருக்கிறது.

இந்த முயற்சிகளுக்குத் தனியார் துறையின் ஒத்துழைப்பும் கோரப்படும் என பிரதியமைச்சர் சந்திரசிறிஜெயதீர தெரிவித்துள்ளார்.

வளர்முக நாடுகளில் கட்டட நிர்மாணதுறைக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. சுனாமி அனர்த்தத்தால் சேதமடைந்த கட்டடங்களைப் புனர்நிர்மாணம் செய்யும் முயற்சிகள் தீவிரமடைந்திருப்பதால் அந்தத்துறையில் மறுமலர்ச்சியைக் காணக்கூடியதாக இருக்கிறது.

கட்டடப் பொருட்களுக்கான தேவையும் அதிகரித்துள்ளது. முன்னைய ஆட்சிக் காலத்தில் மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்ட கட்டடப்பொருட்கள் கூட்டுத்தாபனம் தற்போதைய அரசாங்கத்தின் முயற்சியால் இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றப்பட்டிருக்கிறது எனவும் ஜெயதீர மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு சங்கராஜ மாவத்தையில் அமைந்திருக்கும் பிரதான விக்ரர் நிலையத்தை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ திறந்து வைக்கவுள்ளார். (ற-2)

## கூ. மொ. வி. நிலைய ஊழியர்கள் உயர்நீதிமன்றில் உரிமை மனுத்தாக்கல்

(கொழும்பு)

கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய ஊழியர்களின் தொழில் பாதுகாப்பை உறுதி செய்யுமாறும் தமக்குச் சம்பளம் பெற்றுத் தருமாறும் உத்தரவு ஒன்றைப் பிறப்பிக்குமாறு கோரி அடிப்படை உரிமை மனு ஒன்று உயர்நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் சில்லறை விற்பனைப் பிரிவு ஊழியர்களின் தொழில பாதுகாப்பை உறுதி செய்யும் சங்கம இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளது.

இந்த மனுவில் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் சில்லறை நிறுவனம் அந்த விற்பனை நிலையத்தின் பணிப்பாளர், வர்த்தக சபை, வாணிப மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, பாராளுமன்ற உறுப்பினர் ரவிகருணாநாயக்க ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் சில்லறை நிறுவனம் கடந்த ஜூன் மாதம் முதல் ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்காமல் சில்லறை விற்பனை நிலையங்களை மூடிவைத்துள்ளதாக அந்த மனுவல் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-7)

## சுழற்சிமுறைக் கடன் அடிப்படையில் மீனவருக்கு வலைகளும் வள்ளங்களும்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்தின் மாவட்ட மீளாய்வுக் குழுக் கூட்டம் கடந்த 25 ஆம் திகதி யாழ்.மாவட்ட செயலகத்தில் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்தின் யாழ்.திட்டப்பணிப்பாளர், கமநல சேவைகள் அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர், சம்மந்தப்பட்ட பிரதேச செயலர்கள், உள்ளூராட்சித் திணைக்கள உதவி ஆணையாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக் கூட்டத்தில் முக்கியமாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்தினால் முன்மொழியப்பட்ட புனர்வாழ்வு அபிவிருத்தித் திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

இத்திட்டங்களில் வேலணை, வலிகாமம தென்மேற்கு கடற்றொழில் சமாசப் பகுதிகளில் 17 ஏல விற்பனை நிலையங்களை அமைப்பதற்கும், வள்ளங்களையும், வலைகளையும் சுழற்சிமுறைக் கடன் அடிப்படையில் வழங்குவதற்கும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்ட நிறுவனம் முன்வைத்ததிட்டத்திற்கும் அனுமதி வழங்கப்பட்டது.(அ-19)

# மகளிர் உலகம்



# விஷத்தில் ஊறிய ஆண், பெண் உறவு!



பெண்ணியத்தின் முக்கிய நோக்கம் அல்லது இலக்கு, ஆண்களை ஒட்டு மொத்தமாக வெறுப்பதா, அல்லது பெண்மையை, அதன் பரிணாமங்களை வெளிக்கொணர்வதா என்று புரியவில்லை. ஒட்டு மொத்தமாக ஆண்குலம், பெண்ணியத்தை வெறுக்கிறது என்கற எண்ணம் பெண்களிடையே நிலவுகிறது.

நமக்கு இன்று தேவை ஆணாதிக்க மனோபாவமோ அல்லது பெண்ணிய நோக்கோ அல்ல.

மூச்சுக் காற்றைக் கூட நிதானித்துவிட முடியாத சூழலில், ஆண் சமூக ரீதியாக சந்திக்கும் அநேக பிரச்சினைகளை இன்றைய பெண்ணும் சந்திக்கிறாள்.

எனவேதான் பெண ஆண் மீதும், ஆண் பெண் மீதுமான மனிதாபிமான, ஆதரவான அணுகுமுறை இன்றைய கால கட்டத்தின் அவசியமாகிறது.

இரவு நேரம், வேலை செய்து களைத்துப் படுக்கும் மனைவ' தூங்கட்டும் என்று சிணுங்கும் குழந்தையை தோளில் போட்டு தட்டிக் கொடுக்கும் கணவன்மார்களும் உண்டு.

அதேபோல் குழந்தை சிறு நீர் கழித்தால்கூட 'இந்தா பிடி' என்கிற ஆண்களும் உண்டு.

பலமும் பலவீனங்களும் ஒருவருக்கொருவர் பங்கு போட்டுக் கொண்டிருக்கையல், ஆண, பெண் என்று வேறுபாடு பார்த்துக் கொண்டிராமல், மனித பலம், மனித பலவீனம் என்று அணுகுவதே ஆரோககியமானது.

இந்த ஆண், பெண் குழப்பம் பிறப்பிலேயே நமக்குள இருக்கிறது. உடல் ஆரோக்கியத்தற்குக் கொடுக்கும் முக்கியதுவம்போல் மன ஆரோக்கயத்த'ற்கு நாம் முககியத்துவம் கொடுப்பதில்லை.

சிறு பராயத்திலேயே ஆண், பெண வேறுபாட்டை விஷம் போல் ஊட்டி விடுகறோம். ஆண், பெண ஸ்பரிசம் என்பது ஒரு தகாத செயலாகக் கருதப்படுகிறது.

ஆயிரம் பக்கங்களில் பேச, எழுத முடியாததை ஒரு சின்ன ஸ்பரிசம் சொல்லுமல்லவா? 'ஹலோ' என்று கை குலுக்கும போது ஒரு மெல்லிதான சந்தோஷம் வருகிறதல்லவா?

ஸபரிசம், ஒரு தகாத செயலாகக் கருதப்படும்வரை, பஸ்ஸின் கூட்டத்தினூடே ஆண'ன் வரல்கள் பெண்ணின உடலை மேய்ந்து கொண்டே தான் இருக்கும்.

ஆண் பெண்ணை அடிமையாக்கும் ஆணாதிக்கச் சிந்தனையும், ஆணை வெறுக்கும் பெண்ணின் உணர்வும் மாற்றப்பட வேண்டும்.

பெண்ணியவாதி என்று தன்'னை முத்திரை குத்திக் கொண்ட ஒருவர் 'நாமெல்லாம் வ'லங்குகள்தான் ஒருவரையே வாழ்நாள் முழுவதும நேசிக்கிறோம். வெளியே சொன்னால் தவறாகி விடுமென்று சொல்லாதிருக்கின்றோம்.

நன்றாக யோசியுங்கள் செக்ஸ், ஓர் உணவு போல. எங்கு சாபபிடுகிறோம் என்பதல்ல முக்கியம்' என்றார்.

அதிலிருந்த இன்னொரு பெண், 'அப்படியெனில், நமக்கென்று ஒரு கடப்பாடும், கோடபாடும தேவையில்லையே.

நாம் மனிதர்களாக இருப்பதை மறப் போமானால் எதற்காக நமக்கென்று ஒரு சமூகம்?' என்று அந்த பெண்ணியவாத'யிடம் கேட்டாள். அவர் கருத்தை மாறறிக் கொள்வதாயில்லை.

இவ்விடத்தில் பாரதியின் பெண் நினைவுக்கு வந்தாள்.

பெண்ணியம் என்கிற பெயரில பெண்ணாதிக்க சிந்தனைகள் உலாவுவதை அறிந்து கொண்டது அன்று தான்.

தன்னை சக்தியாக்கும், தன்னை உணர்ந்து கொள்ளும், தன் முகத்தை தானே அணிந்து கொளளும் பெண் பாரதி கண்ட கனா.

மனிதர்கள், தங்களை மனிதர்களாக நோக்கச் செய்கிற நிலை ஏற்பட வேண்டும்.


-தேன்மொழி.

## சமைத்துச் சுவைப்போம்

### உருளைக்கிழங்கு பாண் உப்புமா

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| பாண் துண்டுகள் | - 6 |
| நடுத்தர அளவிலான உருளைக்கிழங்குகள் | - 2 |
| பெரிய வெங்காயம் | - 2 |
| முந்திரிப்பருப்பு | - 6 |
| பச்சை மிளகாய் | - 3 |
| சிறிய தக்காளிப்பழம் | - 1 |
| தேங்காய்த் துருவல் | - கால் மூடி |
| இஞ்சி | - சிறிதளவு |
| சீரகம் | - 1 தே. கரண்டி |
| கறுவாப்பட்டை | - சிறிதளவு |
| கடுகு | -1 தே. கரண்டி |
| உப்பு, எண்ணெய் | - தேவையானளவு |
| கறிவேப்பிலை/கொத்தமல்லி | - சிறிதளவு |



**செய்முறை**

பாணை சிறு துண்டுகளாக ஆக்கிக் கொள்ளவும. உருளைக் கிழங்கை அவித்து சிறிய துண்டுகளாக நறுக்கி வைத்துக் கொள்ளவும. தேங்காய்த்துருவல், வெங்காயம், மிளகாய், தக்காளி, உப்பு, இஞ்சி ஆகியவற்றை கரகரப்பாக அரைத்துக் கொள்ளவும. பின்பு வானலியில் எண்ணெய் விட்டு துண்டுகள் செயயப்பட்ட முந்திரியை வறுத்து தனியே வைத்துவிட்டு கடுகு, சீரகத்தை தாளித்து கறிவேப்பிலை சேர்த்து அதனுடன் மசாலா கலவையை சேர்த்து சற்று வறுக்கவும். பின்பு பாண், கிழங்கு, முந்திரி சேர்த்து கிளறவும் தண்ணீர் தேவை எனில் சிறிதளவு சேர்த்துக் கிளறவும்.

## தலைமுடியைப் பராமரிக்க எளிய வழிகள்...



நம்மில் தலைமுடிப் பிரச்ச'னை இல்லாதவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். ஆண, பெண் என்ற பேதமோ, வயது வ'த்தியாசமோ இதற்குக் கிடையாது. பெண்களுக்குக் குறிப்பாக இளம பெண்களுக்கு தலைப் பொடுகு, பேன் - இளநரை இவை ஓயாத பிரசசினை. ஆண்களுக்கு இவைகளை விட தலையாய பிரச்சினை வழுக்கை ஏற்படுதல், இளம் வயத'லேயே முடி உதிர்வினால் முதுமையான தோற்றத்திற்கு ஆளாகும் நிலை.

முடி சருமத்தின் அடியில் வேர் வ'ட்டு வளர்கிறது. வளர்ந்த வேரின் வளர்ந்த பகுதி சருமத்தின் மேலே தள்ளப்படுகிறது. முடி நார்களினால ஆன தண்டுப் பகுதி. இது மென்மையான செல்களும், இடையிடையே காற்று இடைவெளியும் கொண்டு அமையப்பெற்றது. முடியின் நிறம் அமைய நிறமிகள் தான் காரணம். முடியின் நிறம் வெளுத்துப் போகக் காரணம் செல்களின் இடையே உள்ள இடைவெளி அதிகமாவது தான்.

ஆண்டொன்றுக்கு முடியின் வளர்ச்சி 6 அங்குலம். சிலருக்கு முடியின் வளர்ச்சி ஓரளவுடன் நின்று உதிரத் துவங்கிவிடும பின்பு அங்கு புதிய முடி முளைக்க ஆரம்பிக்கும்.

***சிலருக்கு முடி உதிர்வு அதிக மாக இருப்பது ஏன்?***

முடி உதிர்வு என்றால் அதற்கு அடிப்படைக் காரணம் என்ன என்பதை ஆராய வேணடும். முடி உதிர்வு என்பது நோயின் அளவுகோல். உடலில் ஏற்பட்டுள்ள பாதிப்புத்தான் முடி உதிர்வ'ன் அடிப்படைக் காரணமாகும். தவிர, அதிகமான எண்ணைப் பசை, எண்ணையே இல்லாமல் முடி வறண்டு போதல், அதிகமான டென்ஷன் இப்படி சில காரணங்களும் கூட இருக்கக்கூடும். முடி உதிர்வை கட்டுப்படுதத மிக எளிய வழி, வெறும் கைகளினால் தலைப் பகுதியில இதமாக மஷாஜ் செய்து விடுவது தான். தலையில் இறுக்கமான தொப்பி, ஹேர்பேண்ட் போன்றவைகள் அணிவதனாலும் கூட இரதத ஓட்டம் பாதிக்கபபட்டு முடி உதிர்வு ஏற்படும்.

பொடுகு இன்று பலருக்கும் ஓயாத பிரச்சினை ஆகிவிட்ட ஒன்றுதான். அதிகமான எண்ணைப் பசை மற்றும டென்ஷன் போன்றவைகள் இதற்கு காரணமாகலாம். இது எளிதில் வரக்கூடிய பாதிப்பு. எனவே பொடுகு உள்ளவர்கள் பயன்படுத்திய சீப்பு, டவல், தலையணை உறை போன்றவைகளை அடுத்தவர்கள் பயன்படுத்தவே கூடாது.

***வழுக்கைக்கான காரணம்?***

தலைப்பகுதியில் ஏற்படும் வறட்சியும் அதனால் ஏற்படும் முடி உதிர்வை ஆரம்பததிலேயே கவனிக்காமல் அலட்சியப்படுததுதலும் தான் வழுக்கைக்கு முக்கிய காரணமாகிறது,

***நுனியில் முடி பிளவுபட என்ன காரணம்?***

உடல் நலம் பாதிக்கப்பட்டுள்ளதன் அடையாளம்தான் நுனியில் ஏற்படும் பிளவு. காரணம் அறிந்து டயட் மாற்றி உண்டாலே இந்தப் பிரச்சினை தீரும். அதேபோல நரை வேகமாக ஏற்பட முடிப்பகுதியில் ஏற்படும் அதிர்வுதான் காரணம்.

***முடி பராமரிப்புக்குரிய எளிய வழிகள்***

அதிகமாக எண்ணை தடவவும் கூடாது. அதேபோல எணணை தடவாமலும் இருக்கக் கூடாது. தலையை நேரம் கிடைக்கும் போது மென்மையாக மசாஜ் செய்து கொள்ளுதல் நலம். இதனால் இரத்த ஓட்டம் சீராகும். முடி உதிர்வது நிற்கும்.

குளிர்ந்த நீரினால் தலையை அலசுவது நலம். தரும். ஈரத் தலையை சீப்பினால் வாரக்கூடாது. கூடுமானவரை ட்ரையர் பயன்படுத்துவதைத் தவிர்த்தல் நலம்.

எண்ணைப் பண்டங்கள், இனிப்புப் பொருட்களை உண்ணாமல் தவிர்த்தல் நலம். பொடுகு, பேன் போன்ற பாதிப்புகளுக்கு உடனடியாக மருத்துவரை நாட வேண்டும். அதேபோல முடி உதிர்வை ஒருபோதும் அலட்சியப்படுத்தக் கூடாது. இப்படி செயவது வழுககை ஏற்படக் காரணமாகிவிடும என்கின்றனர் வைதத்திய நிபுணர்கள்.

## நல்ல உணவு

உணவில் சில பொருட்களை தினமும் சேர்த்தால் பலவகையான நோய்கள் நெருங்காமல் பார்த்துக் கொள்ளலாம்.

* உணவில் சீனிக்குப் பதில் தேன சேர்க்க வேண்டும். இது உடலில் ஏற்படும் நோய்தன்மையை பெருமளவு குறைக்கும்.

* உருளைக்கிழங்கின் தோலில் பொட்டாசியமும் விற்றமின் 'பி'யும் உள்ளது. அதனால் உருளைக் கிழங்கை நன்றாக கழுவிவிட்டு தோலுடன் சமையலுக்கு பயன்படுத்துங்கள்.

* தயிரில் இருக்கும் நல்ல பக்டீரியாககள் உடலுக்கு நலம் பயக்கும். சில தருணங்களில் அவை புற்று நோய்த்தன்மையையும் கட்டுப்படுத்தும்.

* இதய நோய் இல்லாதவர்களுக்கும் இதயத்தில் திடீரென்று சில பிரச்சினைகள் தோன்றும்.

மக்னீசியம், பொட்டாசியம் போன்றவைகளின் குறைவால் இத்தொல்லைகள் ஏற்படலாம். அதற்கு அதிகமான வாழைப்பழம், உருளைககிழங்கு, ஆரஞ்சு போன்றவை சாப்பிடுவது நல்லது. கீரையை உணவில் அதிகம் சேருங்கள்.

* கரட்டை உணவில் அதிகம் சேர்ப்பது உடலுக்கு மிக ஏற்றது. ஒரேஞ் நிறத்தில் அடிப்பகுதி கறுக்காது பார்த்து கரட் வாங்க வேண்டும். பெரிய கரட்டுகளாக வாங்க வேண்டாம்.

# பவளவிழாக் காணும் இணுவில் மத்திய கல்லூரி

இ. துரை எங்கரசு
அதிபர்.

எங்கள் கல்வி நிறுவனம் இன்று பவளவிழாவினைக் கொண்டாடிக் கொண்டிருககின்றது. நூறு ஆண்டுகளைக் கடந்துவிட்ட யா/இணுவில் அ.மி.த.க. பாடசாலையும், பவளவிழாவுக்குரிய நிறுவனமான யா/இணுவில் சைவ மகாஜன மகாவித்தியாலயமும் 1992இல் இணைக்கபபட்டு இப்பெயரைப் பெற்றது.

சைவ உணர்வும் சைவச்சூழலில் பிள்ளைகள் கல்வி கற்க வேண்டுமென்ற எணணமும் சைவ மகாஜன வித்தியாசாலையின் தோற்றத்துக்கு அடியிடலாயிற்று. இப்பாடசாலையின் தோற்றத்தில் மும்மூர்த்திகளாக இன்றும் மக்கள் மனதில் இடம்பிடித்த அமரர்களான வைத்தியர் சி.அப்பாக்குட்டி, சி.மயில்வாகனம், க.பொன்னையா ஆகியோரைக் குறிப்பிடலாம். வைத்தியர் சி.அப்பாக்குட்டியினால் வழங்கப்பட்ட காணியில் 1930ஆம் ஆண்டு ஆனி மாதம் இரண்டாந் திகதி கணித ஆசிரியர் ஆ.சின்னத்தம்பியின் தலைமையின் கீழ் மூன்று ஆசிரியர்களது துணையில் 26 மாணவர்களுடன் கற்றல் செயற்பாடு ஆரம்பமானது. மேலும் அவ்வாண்டிலேயே ஐந்து ஆசிரியர்களும் 75 மாணவர்களும் புதிதாக சேர்க்கப்பட்டனர்.

1933இல் இப் பாடசாலை உதவி நன்கொடை பெறும் பாடசாலையாக பதியபபட்டது. 1935இல் இங்கு ஆங்கிலம், ஒரு பாடமாக கற்பிக்கப்பட்டது. 1936 இல் மாணவர்க்கு மதிய போசனம் வழங்கபபட்டது. 1937 இல் வித்தியாதிபதி றொபின்சன் பாடசாலையைத் தரிசித்து கனிஷ்ட, சிரேஷ்ட வகுப்புகள் வைப்பதற்கு அனுமதியளித்தார். 1938ஆம் ஆண்டு தொடககம் மாணவர்கள் பொதுப் பரீட்சைக்குத் தோற்றலாயினர்.

1960ஆம் ஆண்டு மார்கழி மாதம் முதலாந திகதி இப்பாடசாலை அரசுடமையாக்கப்பட்டது. 1979இல் இபபாடசாலை மகா வித்தியாலயமாக விஸ்தரிக்கப்பட்டது. க.பொ.த.உயர்தரப் பிரிவில் கலை, வர்த்தகப் பாடங்கள் போதிக்கப்பட்டன. 1992இல் இப்பாடசாலையுடன் யா/இணுவில் அ.மி.த.க.பாடசாலை



ஒன்றிணைக்கப்பட்டு இணுவில் மத்திய கல்லூரி என பெயர் வழங்கப்படலாயிற்று.

இணுவிலினுடைய கல்வி மரபில் தலை சிறந்த நல்லாசிரியர்கள் அதிபர்களாக இருந்து இணுவில் மத்திய கல்லூரியின் கல்விசார் ஆற்றல்களை வளர்ப்பதில் பெரும்பங்கு கொண்டு உழைத்தனர். அதிபர்களின் முயற்சியால் சைவமும், தமிழும் தழைத்து மேலோங்கி வளர்ந்தன. சிறந்த ஆசிரியர் குழாத்தை உருவாக்குவதில் அதிபர்கள் பெரும் பங்கு கொண்டு உழைத்தனர்.

பாடசாலையையும் சமூகத்தையும் ஒன்றிணைத்து வளர்த்துக் கல்வியால் சமூகத்தையும், சமூகத்தால் கல்வியையும் வளர்த்தனர். ஒழுக்கசீலர்களாக வாழ்ந்து அறக்கருத்துக்களை மக்கள் மத்தியிலே பரப்பினர். தெளளுற்ற தமிழமுதின் சுவையை அனைத்து மாந்தர்ககும் அள்ளி வழங்கினர். நீதிக்கும் நியாயத்துக்கும் சான்றாதாரங்களாகத் திகழ்ந்தனர். அறிவுக்கும், ஆணமைக்கும் அணிகலனகளாக விளங்கினர்.

பாடசாலைகளின் தொனி அதிபர்களால் தீர்மானிக்கப்பட்டது. அதிபர்கள ஆசிரியர்களின் கல்வி வளர்ச்சியிலும பங்கெடுத்தனர். ஆசிரியர்களை சான்றோர்களாக மாற்றுவதற்குரிய வாண்மைப பயிற்சியைக் கொடுத்தனர். கல்விக் கோட்பாடுகளிலும் கல்வி நடைமுறைகளிலும் ஆழ்ந்த புலமை பெற்றிருந்தனர். 'கல்வியழகே அழகு' என்பதை சமூகததுக்குப் புகட்டி நின்றனர். ஏழைச் சிறார்களுக்கு இலவசமாக கல்வியை வழங்குவதில் ஊக்கமுடையவர்களாய் இருந்தனர். 'அன்ன யாவினும் புண்ணியங்கோடி ஆங்கோர் ஏழைககு எழுத்தறிவித்தல்' என்ற உயர்ந்த நோக்கைச் செயலாற்றினர்.

இன்று சிதைந்த நிலையிலுள்ள கட்டடம் 1938இல் கட்டபபட்டது. அன்று சுமார் 650 மாணவர்களது கட்டடத் தேவையை இனிதே நிறைவு செய்வதாயிற்று. ஆயினும 1988இல் இடம்பெற்ற வன்செயலால் அக்கட்டடம் தன் பொலிவினை இழந்து ஒரு சிறுதுண்டுக் கட்டடமாக விளங்குகிறது. இதற்கு மாறாக வானோங்கிய இரணடு கட்டடங்கள் மற்றும் ஒரு மாடிக் கட்டடம், தனிக்கட்டடம் என விரிந்து தன்னுள்ளே இன்றைய கல்வித் தேவையை நிறைவு செய்ய பல்துறை சார்ந்து வளர்ந்து நிற்கிறது. வசதியான விஞ்ஞான கூடம், கணனி நிலையம், கட்புல செவிப புல சாதன அறைகள், சிறுவர் கனிஷ்ட மாணவர்களுக்கான தனித்தனி நூலகங களையும் கொண்டு காணப்படுகின்றது.

வலிகாமம் கல்வி வலயத்தில் மாணவர் எண்ணிக்கையிலும் உயர்ந்துள்ளது. வெறும் மாணவர் எண்ணிக்கை மட்டுமன்றி பொதுப் பரீட்சைகளின் பெறுபேறுகளிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் கல்லூரியின் வளர்ச்சி பிரமிக்கத்தக்கதாயுள்ளது.

எடுத்துக்காட்டாக 2004ஆம் ஆணடு க.பொ.த உயர்தரப்பரீட்சைப் பெறுபேறறில் வலிகாமம் கல்வி வலயத்தில 80.77% ஐப் பெற்று கலைப்பிரிவு முதலாம் இடத்திலும், கலை வர்த்தகம் ஆகிய இரு பிரிவுகளையும் உள்ளடக்கி 71.43% மான கல்விப் பெறுபேற்றைப் பெற்று 2ஆம் இடத்தையும் இடம்பிடித்துளளமையை சுட்டிக்காட்ட முடியும். (அ)

---

## ஆழிப்பேரலையில் காணாமற் போனவர்கள்
## இறந்தவர்களாகப் பதிவு செய்யப்படுவர்

(கொழும்பு)

கடந்த டிசம்பர் 26ஆம் திகதி 2004 இல் இடம்பெற்ற ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போது காணாமற் போனவர்களை இறந்தவர்களாகக கருதி அவர்களது மரணம் பதிவு செய்யப்படவுள்ளது.

இதற்கான சுற்றறிக்கை பதிவாளர் நாயகம் திணைக்களததினால் பிரதேச செயலகங்கள், மாவட்டப் பதிவாளர் அலுவலகங்கள் ஆகியவற்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. காணாமற் போனவரின் உறவினர் அல்லது காணாமற் போனவரைப் பற்றி முழுமையாக அறிந்தவர் மரணம் தொடர்பான பதிவுக்கு விண்ணப்பிக்க முடியும்.

அத்தகையவர்கள் விண்ணப்பங்களைத தத்தமது பிரிவு கிராம அலுவலரிடம கையளிக்க வேண்டுமெனவும் விண்ணப்பத்துடன் மரணத்தை உறுதிப்படுத்தும் சத்தியப் பத்திரமும், பொலிஸ் அறிக்கையும் இணைககப்படல் வேண்டுமெனவும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிராம அலுவலரின் உறுதியுரையுடன் பிரதேச செயலர் தமது மாவட்ட உதவிப பதிவாளர் பணிமனைக்கு அனுப்பி, காணாமற் போனவரின் மரணத்தினைப் பதிவு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. காலி, கொழும்பு, குருநாகல், இரத்தினபுரி, மட்டக்களப்பு, யாழ்பபாணம, கண்டி ஆகிய மாவட்டப் பதிவுகாரர் அலுவலகங்களில் பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகப் பதிவாளர் நாயகம் எஸ்.கே. ரட்ணசிறி அறிவித்துள்ளார். (ந-04)

## குற்றச் செயல்களுடன் தொடர்புடைய
## 2 பெண்கள் உட்பட 9 பேர் கைது

(கொழும்பு)

நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் கொள்ளை உட்பட பல குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 9 பேர் ஆயுதங்களுடன் முல்லேரியாப் பொலிஸாரினால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஒரு சந்தேக நபரிடம் இருந்து கிடைத்த தகவல்களின் அடிப்படையில் ஏனைய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதோடு ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

ரி.56 ரக துப்பாக்கியும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியும் கைக் குண்டுகளும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபர்களில் 2 பெண்களும் அடங்குவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளார்கள். (அ-2)

## வடமராட்சி கிழக்குப் பாடசாலைகளுக்கு யுனிசெவ் நிறுவனம் உதவி வழங்கும்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கிலுள்ள எட்டு பாடசாலைகளுக்கு மலசலகூடம், குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க யுனிசெவ் நிறுவனம் முன்வந்துள்ளது.

இதற்காக யுனிசெவ் நிறுவனம் 25 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது. இவ்நிதியம் மலசலகூடங்களையும் குடிநீர்க் கிணறுகளையும் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுனாமி அனர்த்தங்களால் முற்றாக சேதமடைந்து தற்காலிக கொட்டகைகளில் இயங்கும் ஆழியவளை சி.சி.க. பாடசாலை, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம், வெற்றிலைக்கேணி றோகபாடசாலை, கட்டைக்காடு றோ.க.பாடசாலை, மாமுனை அ.த.க.பாடசாலை, செம்பியன்பற்று றோ.க.த.பாடசாலை, மணற்காடு றோ.க.பாடசாலை, தாளையடி றோ.க.பாடசாலை என்பனவற்றுக்கே இவ்வசதிகளை செய்து கொடுக்கவுள்ளது. (அ-35)

## சுனாமியால் சேதமடைந்த பாடசாலைகளுக்கு நிரந்தரக் கட்டடங்கள் அமைக்க உதவி

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கில் சுனாமி அனர்தத்தினால் முற்றாக சேதமடைந்த பாடசாலைகளுககு நிரந்தர கட்டடம் அமைப்பதற்கு பல நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

ஜி.ரி.இசற், யுனிசெவ், ஜெய்சா போன்ற நிறுவனங்கள் பாடசாலைகளுக்கு நிரந்தர கட்டடம் அமைப்பதற்கு முன்வந்துள்ளன. ஆழியவளை சி.சி.க.பாடசாலை, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம், வெற்றிலைக்கேணி றோ.க.த.க பாடசாலை, கட்டைக்காடு றோ.க.த.க. பாடசாலை, மாமுனை அ.த.க.பாடசாலை, செம்பியன்பற்று றோ.க.த.க.பாடசாலை, மணற்காடு றோ.க.த.க.பாடசாலை, தாளையடி றோ.க.த.க.பாடசாலை ஆகியவையே நிரந்தர கட்டடம் அமைப்பதற்கு தெரிவு செய்யப்பட்டனவாகும். இவற்றிற்கான காணிகள் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டுள்ளன.

மேற்படி பாடசாலைகளுக்கு தற்காலிக கொட்டகைகள் அமைப்பதற்கு யுனிசெவ் நிறுவனம் 1 கோடியே 30 இலட்சம் ரூபாவை செலவிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-35)

## சிறுவர் நாடகப் போட்டி

(கோப்பாய்)

கோப்பாய் கோட்டப் பாடசாலைகளுக்கிடையேயான சிறுவர் நாடகப் போட்டி நிகழ்வுகளில் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம், கோப்பாய் நாவலர் வித்தியாலம், அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் ஆகியன முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைக் பெற்றுள்ளன. (ற-79)

## ஞானச்சுடர் வெளியீடு

(மருதங்கேணி)

தொண்டமனாறு செல்வச்சந்திதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம் சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் மாதம் தோறும் வெளியிடப்படும் ஞானச்சுடர் ஆன்மீகச் சஞ்சிகையின் ஆடி மாத வெளியீடு நாளை வெள்ளிக்கிழமை முறபகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதன் வெளியீட்டுரையை கு.தியாகராஜ சர்மா(நீர்வைமணி)வும், மதிப்பீட்டுரையை யாழ். இந்துக் கல்லூரியின் இளைப்பாறிய பகுதித் தலைவர் சி.புண்ணியலிங்கமும் நிகழ்த்தவுள்ளனர். (அ-35)

## அடிக்கடி மின்தடை

(கோப்பாய்)

கடந்த சில நாட்களாக கோப்பாய் மத்திப பகுதியில் இரவு வேளையிலும் பகல் வேளையிலும் அடிக்கடி மின்தடை ஏற்பட்டுவருகின்றது.

அதைவிட சில பகுதிகளில் சீரற்ற மின் சாரம் காரணமாக சில வீடுகளில் மின் உபகரணங்கள் பழுதடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ற-79)

## சமூகக்கல்வி ஆக்கத்திறன் போட்டி

(கோப்பாய்)

கோப்பாய் கோட்ட பாடசாலைகளுக்கிடையேயான சமூகக்கல்வி ஆக்கத்திறன் போட்டி நிகழ்வுகள் எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறவுள்ளதாக கோட்டக்கல்வி அதிகாரி தெரிவித்துள்ளார். (ற-79)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி அமிர்தபாஷினி சமேத சந்திரசேகர வாரிவனநாதர் சிவன் ஆலய அமிர்தபாஷினி அம்பிகைக்கு ஆடிப்பூரத்தை முன்னிட்டு 10 நாட்கள் அலங்கார உற்சவவிழா நடைபெறவுள்ளது.

விழா நாளை காலை 9.00மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு ஆடிப்பூர விழா இடம்பெறும. இதனைத் தொடர்ந்து முற்பகல் 11மணிக்கு சாவகச்சேரி கல்வயல் ஆசிரியர் வாசுதேவாவன் ஆன்மீகச் சொற்பொழிவு இடம்பெறும். (ற-2)

## மகோற்சவம்

(மருதங்கேணி)

பருத்தித்துறை சிவன் கோவில் வருடாந்த அம்பாள் மகோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள உற்சவம் இடம்பெறும். எதிர்வரும் ஓகஸ்ட் 6ஆம் திகதி சனிக்கிழமை இரத உற்சவமும் 7ஆம் திகதி ஆடிப்பூரத்தில் தீர்த்த உற்வசமும் இடம்பெறும். (அ-35)

# புலனாய்வுத் துறை அதிகாரிகள் இடமாற்றம் கோரி விண்ணப்பம்

(கொழும்பு)

இராணுவப் புலனாய்வுத் துறையின் உயரதிகாரிகள் மாற்றம் பெற்றும், ஓய்வுபெற்றும் வருகின்றனர். இது தொடர்பாக நேற்று முன்தினம் ஆங்கில நாளேடு ஒன்று விபரம் வெளியிட்டுள்ளது.

புலனாயவுத்துறை அதி உயர் அதிகாரியான மேஜர் ஜெனரல் கபில ஹெந்த விதாரண உள்ளிட்டவர்களின் மாற்றங்கள் இதற்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

இராணுவப் புலனாய்வுத் துறையில் மேஜர் கப்டன் நிலையிலுள்ளவர்கள் வேறு பிரிவுகளுக்கான மாற்றம் அல்லது ஓய்வு பெறுதலுக்கு அனுமதி கோரியுள்ளனர்.

உயிர் அச்சம் இவர்களின் இந்த முடிவுக்கு பிரதான காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அததுடன் பாதுகாப்பு என்று அதி உயர் மட்டத்தில் ஏற்படுத்தப்படும் மாற்றம் இந்த அச்சம திடீரென அதிகரிக்கப்பட்டதற்கு இன்னுமொரு காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமக்குப் போதிய பாதுகாப்பு தரப்படவில்லை எனவும் இந்த அதிகாரிகள் குற்றம்சாட்டியுள்ளனர். கபிலவிறகு முனனா, திருகோணமலை புலனாய்வுத்துறை பொறுபபதிகாரி சம்பிக மஹதன் திலகே கொழும்பு தலைமையகத்துக்கு மாற்றப்பட்டார்.

வெலிக்கந்தைப் புலனாய்வுப பொறுபபதிகாரி சுதமன கமஹே மற்றும் இராணுவப் புலனாய்வுத்துறையின் இரண்டு கப்டன் நிலை அதிகாரிகள், மட்டக்களப்பில் உள்ள 23ஆவது டிவிசனில் இரு பிரிகேட்டுக்களில் பாதுகாப்புக்குறித் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

கபில ஹெந்த விதாரணவின் திடீர் இடமாற்றத்தால் அவரின் நேரடி ஒருங்கமைப்பில் களத்தில் செயற்பட்ட பெரும் எண்ணிக்கையான புலனாய்வாளர்கள் தனித்து விடப்பட்டுள்ளதாகவும், இது மோசமான பின்னடைவினை ஏற்படுத்தும் என்றும் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முக்கிய அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக அவ் ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. (அ-4)

# வில்பத்து சரணாலயத்துக்கு காட்டு யானைகளை விரட்டத்திட்டம்

(குருநாகல்)

குருநாகல் மாவட்டத்தில் நடமாடும் காட்டு யானைகளை விரட்டுவதற்கான விசேட நடவடிக்கை ஒன்று சுற்றாடல், இயற்கைவள அமைச்சர் பௌசியின் தலைமையில் நேற்று முன்தினம மேற்கொள்ளப்பட்டது.

குருநாகல் மாவட்டத்தில் கல்கமுவ, கொஹுட்டுவ, கிரிப்பாவ ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் இந்த நடவடிக்கை கடந்த திங்கட்கிழமை மேற்கொளளப்பட்டது.

இரண்டு மாத காலத்திற்கு மேற்கொள்ளப்படவுள்ள இத் திட்டத்தின் மூலம் இந்தப் பிரதேசங்களில் நடமாடும் காட்டு யானைகள் வில்பத்து தேசிய விலங்குகள் சரணாலயத்திற்கு விரட்டப்படும்.

கல்கமுவ குளத்துக்கருகே நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்படட இநத நடவடிக்கையில் சுற்றாடல் இயற்கை வள அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி கலந்து கொண்டுள்ளார்.

வில்பத்து சரணாலயத்திற்கு யானைகள் விரட்டப்பட்ட பின்னர் அவை மீண்டும் திரும்பி வராமல் தடுப்பதற்கு மின்சார வேலிகளையும் அகழிகளையும் அமைக்கவும் திட்டமிட்டுள்ளது.

கடந்த 7 மாதங்களில் காட்டு யானைகளின் தாக்குதலினால் இப் பிரதேசங்களில் 9பேர் உயிரிழந்துள்ளதுடன் 50ற்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (து-9)

# டீசல் விலையில் மாற்றமில்லை

(கொழும்பு)

பெறுமதி சேர்வரியை நீக்கினாலும் டீசல்விலை குறையாது என்று இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜாலிய மெத்தகம தெரிவித்துள்ளார்.

உலக சந்தையின் விலையேற்றத்திற்கேற்ப இலங்கையில் எரிபொருளின் விலை மேலும் அதிகரிப்பதைக் கட்டுப்படுத்தவே பெறுமதி சேர்வரி நீக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

15 வீதமாக அறவிடப்பட்ட வற்வரியை நீக்கியதன் மூலம அரசாங்கத்திற்கு மேலதிகமாக சுமார் ஆயிரம் மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகக் கூறிய ஜாலிய மெத்தகம, ஒரு லீற்றர் டீசல தொடர்ந்தும் 50ரூபாவுக்கே விற்பனை செய்யப்படும் என்று தெரிவித்துள்ளார். (து-7)

# மத்திய மாகாண தமிழ் பாடசாலைகளுக்கு பட்டதாரி ஆசிரிய நியமனங்கள்

## ஆகஸ்ட் முதல் வாரத்தில் இடம்பெறுமென அறிவிப்பு

(கொழும்பு)

மத்திய மாகாண தமிழ்ப் பாடசாலைகளுக்கான பட்டதாரி ஆசிரியர் நியமனங்கள் ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் வழங்கப்படும என்று மாகாண தமிழ்க் கல்வியமைச்சர் வி.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

டிக்கோயா புளியாவத்தை தமிழ் மகாவித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஹட்டன் வலய தமிழ்மொழித் தினவிழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மத்திய மாகாண தமிழ்ப் பாடசாலைகளில் ஆசிரியர் நியமனம் கோரி 671 பட்டதாரிகள் விண்ணப்பித்துள்ளார்கள். இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 27, 28ஆம் திகதிகளில் மத்திய மாகாண தமிழ்க் கல்வியமைச்சில் நடைபெறவுள்ளது.

இந்த நேர்முகப் பரீட்சையின மூலம் தெரிவுசெய்யப்படும் பட்டதாரிகளுக்கு ஆகஸ்ட் முதல் வாரததில் ஆசிரியர் நியமனம் வழங்கப்படும் என்று மத்திய மாகாண தமிழ்க் கல்வியமைச்சர் மேலும்தொரிவித துள்ளாா. (து-9)

# ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான கற்பித்தல் சாதன உருவாக்கல் போட்டி பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் கற்றல் கற்பித்தல் தர உள்ளீட்டு மூலவள நிலையம், யாழ்.மாவட்ட பாடசாலைகளுக கிடையே ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் வாண்மைத்துவத்தை வளர்த்து கற்றல கற்பித்தலில் விழிப்புணாவை ஏற்படுத்தும முகமாக கடநத 21ஆம திகதி நடத்திய கற்பித்தல சாதன உருவாக்கல் போட்டியின் பெறுபேறு வருமாறு,

### முதன்மை நிலை-01

**அதிவிசேடம்**

திருமதி சூ.துரைசிங்கம்-கந்தரோரடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம், திருமதி இ.நவரத்தினராசா-கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம், திருமதி தி.டொனா அல்பிறட்-ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.

**விசேடம்**

திருமதி சி.ஞானசேகரம்-ஜோன் பொஸகோ வததியாலயம், திருமதி இ.வேணுகாந்தன்-இந்து மகளிர் ஆரமபுப் பாடசாலை, திருமதி மா.மகேந்திரன்-சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, தி.சுகுமாரன் -இணுவில் இந்துக் கல்லூரி, வே.அன்பழகன்-இந்து ஆரம்பப் பாடசாலை.

**சாதாரணம்**

திருமதி மேரிபெனிக்னாபிலிப்-ஜோன் பொஸகோ வததியாலயம, தி.சுகுமாரன்-இணுவில் இந்துக்கல்லூரி, திருமதி உ.திருச்சபேசன் -கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை, திருமதி த.சாரதா -கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை, திருமதி இ.இராஜேஸ்வரன்-கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை, திருமதி கு.விஜிதா-தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம், திருமதி பி.இராஜசேகரம்-கோண்டாவில் இராமகிருஷ்ணா மகாவித்தியாலயம், திருமதி ஜெ.சிவநடராஜா-கரணவாய் தாமோதர வித்தியாலயம்.

தெ.புவனேந்திரன்-கட்டைவேலி யாக்கரு விநாயகர் வித்தியாலயம், செல்வி. த.சுகந்தினி-நாரந்தனை றோ.க.வித்தியாலயம்.

### முதன்மை நிலை-02

**அதிவிசேடம்**

ஞா.அன்ரன் பிறேமதாஸ்-உரும்பிராய சநதிரோதயா விதது., திருமதி பா.போல்கமல்ராஜ்-உரும்பிராய் சந்திரோதயா விதத., திருமதி ந.ட.தயாளஜெயன்-கநதரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம்.

**விசேடம்**

திருமதி அ.சந்திரசேகரம-கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி., செல்வி கு.திலகவதி-இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை, செல்வி மைதிலி மார்க்கண்டு -கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை, திருமதி ம.உதயகுமார்-இந்துமகளிர் ஆரம்பப பாடசாலை, திருமதி ந.ட.தயாளஜெயன்-கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தி.

**சாதாரணம்**

செல்வி மஞ்சுளா நாகராஜா -ஜோன பொஸ்கோ வித்தி., செல்வி மயூரதி லோகேஸ்வரன்-பனனாலை சேர் கனகசபை அ.த.க.பாடசாலை, திருமதி பு.மனோகரன்-உரும்பிராய் சந்திரோதயா வித்தி., திருமதி ரி.ரி.அன்ரன் கிறேசியன்- சுன்னாகம் றோ.க. த.க.பாடசாலை, திருமதி வ.பாலச்சந்திரன் -கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்.

செ.கபிரியேல்பிள்ளை -உரும பிராய் றோ.க.த.க.பாடசாலை, செல்வி இ.சுபாசினி-கட்டுடை சைவ.வித்தி., திருமதி ச.சிவலிங்கம்-உயரப்புலம் மெ.மி.த.க.பாடசாலை, செல்வி மயூரதி லோகேஸ்வரன்-பன்னாலை சேர் கனகசபை அ.த.க.பாடசாலை, திருமதி த.சுப்பிரமணியம்-தோப்பு அருள்நந்தி வித்தியாலயம்.

### முதன்மை நிலை -03

**அதிவிசேடம**

திருமதி இ.லோகேஸ்வரன்-கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி., திருமதி ம.உதயராசா -கொக்குவில்.கிழக்கு நாமகள் வித்தியாலயம், செல்வி ம.மனலோசனி-உயரபபுலம் மெமி.தக.பாட சாலை.

**விசேடம்**

செல்வி யாழினி அருளானந்தம் - திருக்குடும்ப கன்னியர் மடம், வே.அன்பழகன்- இந்து ஆரம்பப் பாடசாலை, எஸ்.அன்ரனி புலூனோ- இந்து ஆரம்பப் பாடசாலை, திருமதி யசோதா பிரேம்குமார் -திருக்குடும்ப கன்னியர்மடம், த.யோகராஜா-கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம், செல்வி அ.டோறா பான்சி-புதுமடம் றோ.க.த.க.பாடசாலை.

**சாதாரணம்**

திருமதி ந.கேதீஸ்வரன்-கோண்டாவில் இராமகிருஷ்ணா மகா வித்தியாலயம், திருமதி வ.அருட்செல்வன் -உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம், திருமதி பா.போல்கமலராஜ-உரும்பிராய் சந்திரோதயா வித்தி.

திருமதி தெ.கொலின்-பாஷையூர் சென்.அன்ரனஸ றோ.க.ம.வித்தியாலயம், செல்வி க.சுபாலினி -நாரந்தனை றோ.க.ம.வித்தி., திருமதி நி.நந்தினி-நாவாந்துறை றோ.க.வித்தி., திருமதி ந.கேதீஸ்வரன்- கோண்டாவில் இராமகிருஷ்ணா ம.வி., திருமதி பூ.வரதராசா-அராலி கிழக்கு அ.மி.த.க.பாடசாலை.

செல்வி யாழினி அருளானந்தம் -திருக்குடும்ப கன்னியர் மடம், செல்வி அ.டோறாபான்சி-புதுமடம் றோ.க.த.க.பாடசாலை

### கணனி

**அதிவிசேடம்**

த. தயாபரன் -உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை, திருமதி உ.சிவபுத்திரன்- மத்திய கல்லூரி, திருமதி சி.கணேசநாதன் மத்திய கல்லூரி.

**விசேடம்**

செல்வி. த.பிரியலஷ்மி -மத்திய கல்லூரி, செல்வி க.சுமதி -மத்தய கலலூாி, செல்வி யோ.மடோனா -மதத்ய கலலூரி, செல்வி யோ.ஜெனுசினா-மத்திய கல்லூரி (அ)

# மோட்டார்கள் தொடர்ந்து திருட்டு

(கோப்பாய்)

கோப்பாய்க் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளில் நீர் இறைக்கும் மின்சார மோட்டார்கள் திருடப்படும் சம்பவங்கள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன.

பினதங்கிய பாடசாலைகளுககு யுனிசெவ் நிறுவனம் ஊடாகவும் சில பாடசாலைகளுக்கு வெளிநாட்டு அமைப்புக்களின ஊடாகவும் இவை வழங்கப்பட்டு மாணவர்களுக்கு குழாய் நீர் வழங்கப்பட்டு வந்தது.

மோட்டார் மூலம் நீர் வழங்கப்பட்டமையால் ஏனைய நீர் பெறும முறைகள் கைவிடபபட்டுள்ளன. இந்நிலை தொடர்வதால் மாற்றுவழியைப் பெறுவதில் அதிபர்கள் பலத்த சிரமத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது. திட்டமிட்ட குழுவினரே இச் செயலில தொடர்ந்தும் ஈடுபடடுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ற-79)

# நிர்வாகசபைக் கூட்டம்

(இணுவில்)

உடுவில் கமநல சேவைகள் நிலையத்தின் இம் மாத நிர்வாக சபைக்கூட்டம் நாளை வெளளிக்கிழமை மு.ப.9.30 மணிக்கு குழுத்தலைவர் செ.இலகுநாதன தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் சீடா திட்டம், நியாப்திட்டம், உலக உணவுத் திட்டம், கமக்காரர் ஓய்வூதியத் திட்டம, வவசாய அமைபுககளின செயற்பாடு, பயிர்ச்செய்கை முனனேற்றம், விவசாய சம்மேளனங்களின் பொதுக் கூட்டங்கள் போன்ற விடயங்கள் பறறி ஆராயபபடவுள்ளதாக நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் சு.சோதிநாதன் தெரிவித்துள்ளார்.

இக் கூட்டத்தில் உடுவல கமநல சேவைகளுக்கு உட்பட்ட சகல சம்மேளனத் தலைவர்கள், செயலாளருக்கும் கடிதங்கள் அனுபபப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ற-122)

# அரச சட்டத்தரணி ஆஜராகாததால் இரு ஆட்கொணர்வு வழக்குகள் ஒத்திவைப்பு

அரச சட்டத்தரணி நீதிமன்றில் சமுகமளிக்காத காரணத்தால் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெறவிருநத மூன்று ஆடகொணர்வு வழக்குகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

1995,1996ஆம் ஆண்டு காலப பகுதியில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டும் காணாமல் போனவர்கள் மூன்று பேர்களது ஆட்கொணர்வு வழக்குகள் நேற்றுமுன்தினம் யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி சிறிநிதி நந்தசேகரம் முனனிலையில் நடைபெறவிருந்தது.

இவ் வழக்கில் அரச சட்டத்தரணி சேதே குணசேகர சமுகமளிக்காத காரணத்தினால் இவ் வழககுகளில் ஒருவழக்கு ஓகஸட மாதம் 24 ஆம் திகதிக்கும இரண்டு வழக்குகள ஓகஸ்ட் மாதம் 25ஆம திகதிக்கும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று பத்து ஆட்கொணர்வு வழக்குகள் செப்ரம்பர் மாதம 12, 13ஆம திகதக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன. (து-19)

# ஆணவக்காரியின் அரக்கத்தனத்திற்கு

எந்தவொரு உயிரினமும் தன் இனத்தை தானே அழிப்பதில்லை. ஆனால் மனிதன் மட்டுமே தன் இனத்தை அதாவது மனித இனத்தை அழிக்க முற்படுகின்றான். அதிலும் இன்று பெண்-பெண் இனத்தையே கொஞ்சம் கொஞ்சமாக அழித்துக் கொண்டிருக்கும் அவலம் நம் நாட்டில் நடந்துகொண்டிருக்கிறது.

நம் நாட்டில் ஒரு பெண்ணுககு இன்னொரு பெண்ணே எதிரி. பெண் மீது பெண்ணே பொறாமை கொள்வது; மாமியாரே மருமகளை அடித்துச், சித்திரவதை செய்வது; வரதட்சனை கேட்டு கொடுமைப்படுத்துவது, கொல்வது என்று தொன்று தொட்டு சரித்திர காலத்திலிருந்து வந்திருக்கும் தொற்று நோயாக இன்றும் இருந்துகொண்டிருக்கிறது. இதை அறுத்தெறிய எவரால் முடியும்? மனித உரிமை மையங்கள, மகளிர் மன்றங்கள் இருந்தும் இந்த வரதட்சனைக் கொடுமைக்கு முற்றுப்புள்ளிவைக்க முடியவில்லை. இந்த வரிசையில் மற்றுமொரு மருமகள் மாமியாரின் வரதட்சனைக் கொடுமை தாங்கமுடியாமல் தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டாள் இதனால் மனைவியை இழந்த அதிர்ச்சியில் மனமுடைந்த கணவன் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்ட கொடூரம் நடந்திருக்கிறது.

சென்னை வண்ணாரப்பேட்டை மணிகண்ட முதலியார் தெருவில் திராவிடமணி தன் மனைவி முருகேஸ்வரி, மகன் செந்தில்குமார், மகள் சண்முகப்பிரியாவுடன் வாழ்ந்து வந்தார். தன் மகள் சண்முகப்பிரியாவை மிகவும் செல்லமாக வளர்த்து பி.எஸ்ஸி.வரை படிக்கவைத்துள்ளார். பிரியாவுக்கு திருமண வயது நெருங்கியதும் திருமணம் செய்துகொடுக்க மாப்பிள்ளை தேடியிருக்கிறார் திராவிடமணி. இவர்கள் வசிக்கும் தெருவுக்கு மூன்றாவது தெருவில் வசிக்கும் இராஜசேகரன் என்பவரின் மகன் ஜெகன்மோகனின் சாதகம் பிரியாவுக்கும் பொருந்த போட்டோ வைப்பார்த்து மாப்பிள்ளையை இவர்களுக்குப் பிடித்துப்போக சம்பந்தம் பேசியிருக்கிறார்கள்.

திராவிடமணியுடன் படித்தவர் இராஜசேகர். இதனால் தெரிந்தவர்தானே, பெண்ணைக் கொடுத்துவிடலாம் என்று முடிவெடுத்து திருமணத்தைப்பற்றிப் பேசும்போது வரதட்சணை பேரம் நடந்தது. இச் சூழ்நிலையில் இராஜசேகரின் மனைவி மின்னல்கொடி பேராசை கொண்டு பெண்ணுக்கு தாலிச் செயினைப் போட்டுவிடும்படி பெண் வீட்டாரிடம் கூற தகர்றாறு மேலும் முற்றியிருக்கிறது. இந்தத் தகராற்றினால் திருமணமே நடக்காதிருந்திருந்தால் இரண்டு குடும்பங்களுமே இன்று வேதனையடையும் நிலை ஏறபடடிருக்கமாட்டாது. விதி யாரை விட்டது? ஏதோ ஒரு விதத்தில் இரு வீட்டாரின் சம்மதமும் நிறைவேற திருமணம் நிச்சயிக்கப்பட்டது. பத்திரிகை அச்சிடப்பட்டது. திருமணப் பத்திரிகையை இரு வீட்டாரும் சொந்தபந்தங்களுக்குக் கொடுத்துள்ளார்க்ள. 4.12.2003 ஆம் திகதி அன்று ஜெகனும் பிரியாவும் தி மண மண்டபத்திற்கு இரட்டைக் குதிரை வண்டியில் ஊர்தியில் வாண வேடிக்கையுடன் மேள தாளங்கள ஒலிக்க மிகக கோலாகலமாக அழைத்து வரப்பட்டு திருமணம் நடைபெற்றது. திருமணம் முடிந்த கையோடு ஜெகனின் தாய் மின்னல்கொடி தன் வக்கிர புத்தியைக் காட்டியிருக்கிறாள். மறு வீட்டுக்கு பெண்ணை மாத்திரம்தான் அனுப்புவோம் என மின்னல்கொடி கூறியிருககிறாள். திருமணம் முடிந்ததும் மறுவீட்டுக்கு பெண்ணும் மாப்பிள்ளையும் ஒன்றாகப் போவதுதானே வழக்கம். பெண்மாத்திரம் போவது ஊரில், உலகத்தில் இல்லாத வழக்கம் எனக் கூறியதையும் வக்கிர புத்திக்காரியான மின்னல்கொடி ஏற்றுக் கொள்ளவில்லை.

அதன் பின்பு பிரியாவும் ஜெகனும் நெருங்கிப் பழகினால் மாமியார் மின்னல்கொடி பிரியாவைக் கண்டபடி திட்டித் தீர்த்துவிடுவாராம் அவளோடு சேர்ந்து மாமனாரும்

**அன்பான குடும்பம் என நம்பிவந்தவள் ஏமாந்தாள் அன்பில்லாக் கணவன், ஆணவக்காரியான மாமியார், மனைவியின் பேச்சை வேதவாக்காகக் கொள்ளும் மாமனார்- இவர்களிடையே சிக்கித்தவித்தவளுக்கு கிடைத்த பரிசு தூக்குக்கயிறு.**

திட்டுவாராம். மனமுடைந்துபோன பிரியா ஆறுதலுக்காக கணவன் ஜெகனை நாட என் அம்மா இருக்கும்போது என்னுடன் பேசாதே என்று கூறியிருக்கிறான் அச் சற்புத்திரன்.

இதைத் தொடர்ந்து மாமியார் மின்னல்கொடி பிரியாவின் மனதை வார்த்தைகளாலேயே கொத்திச் சின்னாபின்னப்படுத்தியிருக்கிறாள். வீட்டு வேலைக்காரியைப் போன்று வேலைகளைச் செய்யச்சொல்வாராம். பித்தளைப் பாத்திரத்தைத துலககினால் தங்கம் போல் இருக்க வேண்டும் என்றும் சில்வர் பாத்திரத்தைத் துலக்கினால் வெள்ளி மாதிரி மின்ன வேண்டும். வீடு கண்ணாடி மாதிரி இருக்க வேண்டும் என்றும் கூறி வேலை வாங்கியிருக்கிறாள். ஜெகன் சொந்தத்தில் மளிகைக் கடையொன்றை நடத்திவந்திருக்கிறான். அவன் அதிகாலை 5 மணிக்கு கடைக்குச் சென்றால இரவு 11 மணிக்குத்தான் வீடு திரும்புவது வழக்கம். அவன வந்தபின் மனைவி பிரியா பணிவிடைகளைச் செய்தால் கோபம் கொள்ளும் மாமியார் மின்னல்கொடி தகாத வார்த்தைகளால் பிரியாவை திட்டுவாராம். தன்னால் கணவனுக்குப் பணிவிடைகள்கூடச் செய்யமுடியவிலலையே என்ற ஏக்கத்தில் பிரியா இருக்க அதைப் பார்த்துக் கோபம் கொண்ட மின்னல்கொடி கணவன் இராஜசேகரிடம் பிரியாவைப் பற்றி ஒன்றுக்குப் பத்தாகக்குறை சொல்ல இராஜசேகரும் காதால் கேட்க முடியாத வார்த்தைகளால் பிரியாவைத் திட்டித்தீர்ப்பாராம். அத்தனை கொடுமைகளையும் தாங்கிக்கொண்ட பிரியா தாய் முருகேஸ்வரியிடம் தன் மாமியார் பற்றியும், மாமனார் பற்றியும் அவர்கள் நடந்துகொண்ட விதம் பற்றியும் கூறி இதை நீங்கள் என் மாமியாரிடம் கேட்க வேண்டாம் என பெருந்தன்மையுடன் சொல்லியிருக்கிறாள்.

## பலியான பாவை

இப்படியே நாட்கள் நகர்ந்திருக்கின்றன. ஒரு நாளாவது ஜெகனையும் பிரியாவையும் ஹனிமூனுக்கோ, சினிமாவுக்கோ, பீச்சுக்கோ மின்னல்கொடி அனுப்பியதே இல்லையாம்.

தம் மகளுக்கு நடக்கும் கொடுமைகளை கேட்டறிந்த பெற்றோர் ஜெகனையும் பிரியாவையும் தனிக குடித்தனம் வைத்தால் அவர்கள் இருவரும் மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள் என்ற நல்லெண்ணத்தில் மின்னல் கொடியிடமும் இராஜ சேகரிடமும் கூறியிருக்கிறார்கள். இதற்கிடையில் இரண்டு இலட்சம் ரூபா பணம் வேண்டும்; உன் தாயிடம் வாங்கி வா என்று இராஜசேகர் பிரியாவிடம் சொல்ல அதிர்ச்சியான பிரியா உடனே தன் பொற்றோருக்குத் தெரியப்படுத்தியிருக்கிறாள்.

பிரியாவின் அண்ணனுக்குப் பெண்பார்க்கும் படலம் தொடங்க ஒருநாள் பிரியா தன் வீட்டுக்கு வந்து மிகவும கலகலப்பாகப் பேசிவிட்டு தன மாமியார் குடும்பத்தையும் தான் வளர்ந்த விதத்தையும் ஒப்பிட்டுச் சொல்லி வருத்தப்பட்டிருக்கிறாள். இப்படியே ஒரு வருடம் ஓடியிருக்கிறது. அத்தனை அவமானங்களையும் கொடுமைகளையும் தாங்கிக்கொண்ட பிரியாவுக்குப் குழந்தை ஆசை மனதில் குடிகொள்ள தன் டயரியில் விதம் விதமாகக் குழந்தைப் படங்களை வரைந்து மகிழ்ந்திருக்கிறாள்.

தன் மகளுக்குக் குழந்தை இல்லையே என்று வருந்திய முருகேஸ்வரியும் திராவிடமணியும் மூன்று மாதங்களுக்கு முன் ஒரு நல்ல டாக்டரிடம் பிரியாவைக் காண்பித்து மாத்திரை மருந்துகளை வாங்கித் தந்திருக்கிறார்கள். மருத்துவர் சொன்னபடியே பிரியா கருவுற்றிருக்கிறாள். வீட்டில் அனைவரும் மகிழ்ந்தனர். ஆனால் விதி பிரியாவைப் பார்த்துச் சிரித்தது. பிரியாவின் கரு கலைந்துவிடவே பெரும் அதிர்ச்சியடைந்திருக்கிறாள். இச் சூழ்நிலையில் கடந்த மாதம் 29ஆம் திகதி இரவு பிரியா தூக்குப்போட்டு இறந்துவிட்டதாகத் ஜெகன் தொலை பேசியில் கூறியிருக்கிறான். அதைக் கேட்டு அதிர்ந்துபோன முருகேஸ்வரியும் திராவிடமணியும் தங்கள் மகனோடு ஜெகன் வீட்டுக்கு விரைநதிருக்கிறார்கள். இவர்கள் போய்ச் சேர்ந்ததும் என்ன ஆச்சு என்று மின்னல்கொடியிடம் முருகேஸ்வரி கேட்க உள்ளே போய்ப்பார் என்று சொல்லியிருக்கிறாள். இவர்களைக் கண்டதும் ஜெகன் குடு குடுவென எங்கோ ஓடி மறைந்துவிட்டான். இறந்து கிடக்கும் பிரியாவின் நிலையைக் கண்ட முருகேஸ்வரிக்கு சந்தேகம் ஏற்பட பிரியாவின் உடலை வைத்திய பரிசோதனைககுட்படுத்தியிருக்கிறார்கள். பரிசோதனை அறிக்கையைப் பார்த்ததும் எல்லோர்க்கும் அதிர்ச்சி முகமெல்லாம் நகக்கீறல்கள். கனனங்களில கைவிரல் அடையாளம் உடம்பு பூராவும் தடி அடிக்காயம் வழமையாகத் தூக்குப்போட்டு தற்கொலை செயபவர்கள் நாக்கு வெளியே துருததியிருக்கும். விழிகள் பிதுங்கியிருக்கும் கழுத்தில் கயிறு இறுக்கிய காயம் இருக்கும், குருத்தெலும்பு முறிந்திருக்கும். இவற்றையெல்லாம் வைத்துப் பார்த்ததும் பிரியா தற்கொலை செய்யவில்லை கொலை செய்யப்பட்டபின் தூக்கில் தொங்கவிடப்படடிருக்கிறாள் என்ற சந்தேகம் எல்லோருக்கும் ஏற்பட்டது. தவமாய் தவமிருந்து தாங்கள் பெற்ற ஒரே மகளை இழந்துவிட்ட அப் பெற்றோாகள் தவிர்த்துக் கதறியழும் போது கூட மனிதாபிமானமே இல்லாமல் மிருகத்திற்குச் சமமாக நடந்து கொண்டாராம் இராஜசேகர்.

இதைப்பார்த்துக் கொதித்துப் போன பிரியாவின் சகோதரன் வாக்குவாதம் புரிய பயந்துபோன மாமனார் இராஜசேகரம் ஒருபுறமும், கணவன் ஜெகன் ஒருபுறமும் ஓடி ஒளிந்திருக்கிறார்கள்.

பிரியா இறந்த அன்றிரவு 11.30 மணிக்கு பிரியாவின் உடல் பிரேத பரிசோதனைக்கு எடுத்துச்செல்லப்பட்ட பின் மீண்டும் ஒரு அதிர்ச்சியான சம்பவம் நிகழ்ந்தது. தலைமறைவான ஜெகன் மன ஊளைச்சலுக்கு ஆளாகி மனைவியைக் கொன்றுவிட்டு நான் ஏன் உயிரோடு இருக்கவேண்டும் என்று எண்ணியோ என்னமோ ஓடும் ரயில்முன் பாய்ந்து தற்கொலை செய்துகொண்டிருக்கிறான். பிரியாவின் பெற்றோர்கள் மாப்பிள்ளை பார்த்தது முதல் வரதட்சனை கொடுத்து தன் மகள் சித்திரவதை அனுபவிதது இறந்ததுவரை கூறியதுபோல ஜெகனின் பெற்றோர் எதுவும் கூறு முன்வரவில்லை. ஜெகனின் பெற்றோர் யாருமே பிரியாவைப்பற்றிச் சொல்லாமல் இறந்துபோன மகன் ஜெகனை மாத்திரமே நினைத்து அழுகிறார்கள். இதற்கு என்ன காரணம்?

இதுவரை காலமும் மின்னல்கொடி குடும்பம் என்னதான் அக்கிரமம் செய்தாலும மகளைக் கொடுத்துவிட்டோமே அவள அங்கு வாழவேண்டுமே என்ற மனிதாபிமானத்தால் வாய் திறவாமல் இருநதோம். மகளே போய்விட்டாள இனி என்ன இருக்கிறது எனப் புலம்புகிறார் பிரியாவின் தாயார். இங்கு தம் மகனை இழந்து தவிக்கும் இராஜசேகர் மின்னல்கொடி ஒருபுறமிருக்க பிரியாவின் தாய் தந்தையருக்கு என்ன சொல்லப்போகிறார்கள்? வாழவேண்டிய வயதில் பிரியாவும் ஜெகனும் இறந்துவிட்டார்கள். இவர்கள் இருவரின் சாவுக்கு யார் காரணம்? மின்னல்கொடியின் பேராசையும் இராஜசேகரின் தகாத வார்த்தைகளும் தான் என்பது பிரியாவின் பெற்றோர்களின் குற்றச்சாட்டு. சம்பவதினத்தன்று ஜெகன் கடையை மூடிவிட்டு வர முன் பிரியாவைச் சித்திரவதை செய்து கொலைசெய்த மின்னல்கொடியும் இராஜசேகரும், அவளைத் தூக்கில் தொங்கவிட்டு மகன் வந்ததும் ஒரு நாடகமாடி இருக்கிறார்கள். ஜெகன் உண்மையை அறிந்திருந்தாலும் தாய் தந்தையரைக் காட்டிக்கொடுக்க விரும்பாமல் அவர்களுடன் சேர்ந்து நாடகமாடி இருக்கிறான். அதனால் தான் குற்ற உணர்ச்சி குறுகுறுக்க மாமன் மாமியாரை நேரில் பார்க்க அஞ்சி ஓடி ஒளிந்து ஈற்றில் மனச்சாட்சியின் சாட்டை அடியை சகிக்க மாட்டாது ரயில் முன் பாய்ந்து தற்கொலைசெய்து கொண்டிருக்கிறான் என்பது பிரியாவின் பெற்றோரின் குற்றச்சாட்டு.

பரேத பரிசோதனை அறிக்கையின அடிப்படையில் விசாரணையை மேற்கொண்டுவரும் காவல் துறையிடம் உண்மைக் குற்றவாளிகள் சிக்காமலா போய் விடுவார்கள்? வினை விதைத்தவன் வினையை அறுத்துத்தான் தீரவேண்டும்.

மாமியாரும் ஒரு காலத்தில்

**பொ.இராசதுரை**

ஒரு வீட்டு மருமகளாக இருந்தவர் என்பதை அனேகமானவர்கள் மறந்து விடுகிறார்கள். 18,20வருடங்கள் தாய் தந்தையரின் அரவணைப்பில் வளர்ந்த ஒரு பெண் திருமணமானதும் கணவன் வீடே எலலாம் என்ற நினைப்போடு வருமபோது அவளை அன்புடன் அரவனைத்து நடத்தினால் அக் குடும்பம் மகிழ்ச்சியுடன் வாழும் என்பதை ஏனோ எல்லா மாமியார்களும மறந்து விடுகிறார்கள். பெட்டி பெட்டியாகப் பணம் கொட்டிக் கிடந்தாலும் ஒரு குடும்பத்தை மகிழ்ச்சிகரமாக வாழ வைப்பது அன்பு ஒன்றுதான். □

# முச்சக்கர வண்டிகளுக்கு மானிகள் பொருத்த போக்குவரத்து அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

பொதுப் போக்குவரத்து சேவைகளுக்காக எரிபொருள் மானியம் வழங்குவதற்கான முறைகளை வகுக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கான சிபார்சுகளை சமர்ப்பிப்பதற்கென 7 பேர் கொண்ட விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சின் செயலாளர் கலாநிதி டி.எஸ். ஜெயவீர தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சு, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, போக்குவரத்து அமைச்சு, இலங்கை மத்திய வங்கி உட்பட போக்குவரத்துத் துறைசார்ந்த நிர்வாக பிரிவுகளின் பிரதிநதிகள் இந்தக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

இதேவேளை, முச்சக்கர வண்டிகளுக்கும் எரிபொருள் மானியம் வழங்குவதற்கான முறைகளை வகுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் முச்சக்கர வண்டிகள் அனைத்திலும் மானிகளை பொருத்துவதற்கு போக்குவரத்து அமைச்சு தீர்மானித்துள்ளது.

அமைச்சின் ஆய்வு அறிக்கைகளின் படி சுமார் 1 இலட்சத்து 12 ஆயிரம் முச்சக்கர வண்டிகள் பொதுப்போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றது.

மேலும் 50 ஆயிரம் முச்சக்கர வண்டிகள் பகுதி நேர பொதுப் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. இதன் அடிப்படையில் நாளாந்த போக்குவரத்துத் தேவையின் 6 வீதம் முச்சக்கர வண்டிகளின் மூலம் நிறைவேற்றப்படுவதாக போக்குவரத்து அமைச்சின் அய்வுகள் தெரிவிக்கின்றன.

முச்சக்கர வண்களில் பலதரப்பட்ட விதத்தில் கட்டணங்கள் அறவிடப்படுவதால் அந்த நிலையை மாற்றியமைப்பதற்கும் சட்ட திட்டங்களைக்கொண்டு வருவது குறித்தும் போக்குவரத்து அமைச்சு கவனம் செலுத்தி வருகின்றது. (அ-9)

## விதை உருளைக்கிழங்கு

விவசாயிகளை 2005/2006ஆம ஆண்டு காலபோக செய்கைக்கு தங்களுக்கு தேவைப்படும் விதை உருளைககிழங்கின் அளவு, இனம் போன்ற விபரங்களை, தங்கள் பகுதியிலுள்ள கமநல சேவை நிலையங்களில் இம்மாதம் 31ஆம் திகதிகு முன்னர் பதிவுசெய்து கொள்ளும்படி யாழ்.மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது. (அ)

# தாதிமார் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை

நாட்டிலுள்ள அரசாங்க வைத்திய சாலைகளில் காணப்படும் தாதிமார் பற்றாக்குறையைத் தீர்த்து வைப்பதற்கென டிசம்பர் மாதத்திற்குள் 2 ஆயிரத்து 500 தாதிமார்கள் நாட்டின் சகல பகுதிகளுக்கும் நியமிக்கப்படுவார்கள் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் எஸ்.தகானந்த லியனகே தெரிவித்துள்ளார்.

தாதிமார் பயிற்சிப் பாடசாலைகளில் பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறும் தாதிமார்களில் இருந்து இந்த நியமனங்கள் மேற்கொள்ளப்படும் என்றும் இவர்களில் பெரும்பாலானோர் நாட்டில் உள்ள கஷ்ட பிரதேச வைத்திய சாலைகளுக்கு நியமிக்கப்படுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (து-9)

# சிறுவன் படையினரால் தடுத்துவைப்பென பெற்றோர் க.கா.குழுவில் முறைப்பாடு

முகமாலை சோதனைச் சாவடி ஊடாக உறவினர்களை பார்க்கச் சென்ற சிறுவன் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொடிகாமம் அல்லாரையிலிருந்து முகமாலை சோதனைச் சாவடி ஊடாக வன்னிக்குச் சென்ற கருணாகரன்-சசிகரன் என்ற சிறுவன் படையினரால் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக இச் சிறுவனின் பெற்றோர் இலங்கை போர் நிறுத்தக் குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடந்த 17ஆம் திகதி உறிவினர்களை பார்க்கச்சென்ற தங்களுடைய மகனை முகமாலைச் சோதனை நிலையத்தில் படையினர் தடுத்து வைத்து விசாரித்ததை சிலர் பார்த்திருப்பதாகவும், தங்களுடைய மகன் முகமாலை சோதனைச் சாவடி ஊடாக உறவினர் வீட்டிற்கும் செல்லவில்லை, தனது வீட்டிற்கும் திரும்பவில்லை என்றும் பெற்றோர் போர்நிறுத்தக் கண் காணிபபுக்குழுவினரிடம் முறையிட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-9)

# மரணத்தின் நிழலில்

## மீள் பார்வை சதாம் கதை 16

பி.ஜே.ராஜய்யா

## மாமா மகளை மணந்தான்!

கெய்ரோவில் சதாம் நான்கு ஆண்டுகள் தங்கியிருந்தான். தனது 24வது வயதில் உயர் நிலைப் பள்ளிப்படிப்பை முடித்தான். பிறகு சட்டம் பயில்வதற்காக கெய்ரோ பல்கலைக்கழகத்தில் சேர்ந்தான்.

சதாம் கெய்ரோவில் வாசம் பண்ணுகையில், அவனது அரசியல் வாழ்க்கையில் ஒரு துயர நிகழ்ச்சியும், சொந்த வாழ்க்கையில் ஓர் இனிய நிகழ்ச்சியும் நடந்தேறின.

அரபு நாடுகளெல்லாம் ஒரே தேசமாய் இணைவதற்கு முன்னோடி என்று சதாம் போற்றிவந்த எகிப்து-சிரியா இணைப்பு 1961-ல் தகர்ந்தது. இது சதாமை மிகவும் பாதித்து வேதனையடையச் செய்தது.

இனிய நிகழ்ச்சி -திருமண நிச்சயதார்த்தம்!

சாஜிதா வயது 20 பள்ளி ஆசிரியை. சிறுவனாய் கிராமத்திலிருந்து வந்திருந்த சதாமை படிக்க வைத்து வளர்த்து ஆளாக்கி அரசியலில் ஈடுபாடு கொள்ளச் செய்த தாய்மாமன் கைருல்லாவின் மகள்.

சாஜிதாவை சதாமுக்கு திருமணம் செய்து கொடுக்க விரும்பினார் கைருல்லா. அண்ணன் மகளை மருமகளாக்கிக்கொள்ள சதாமின் அம்மாவுக்கும் விருப்பம் இருந்தது.

"நாங்கள் இப்படி நினைக்கிறோம் உன் பிரியம் எப்படி...?" என்று கெய்ரோவிலுள்ள சதாமுக்குக் கேட்டு எழுதினார் கைருல்லா.



சாஜிதாவின் முகம் நினைவுக்கு வந்தது. சதாமுக்கு நான்கு ஆண்டுகளுக்கு முன் அவள் பதினாறு வயதில் இருந்தபோது பார்த்த முகம். அப்போது மாணவியாக இருந்தாள். இப்போது மாணவிகளுக்கு பாடம் சொல்லித்தரும் ஆசிரியை ஆகிவிட்டாளாம்...

இத்தனை பெரியவளான பிறகு அவள் முகம் எப்படி இருக்கும்? கற்பனை செய்து பார்த்தான். அதே பதினாறு வயது முகமே மாறுதலில்லாமல் மீண்டும் நினைவில் முகிழ்ந்தது.

"சாஜிதாவை திருமணம் செய்து கொள்ள எனக்கு பூரண சம்மதம்" என்று பதிலெழுதிப் போட்டான் சதாம்.

மாப்பிள்ளை கெய்ரோவில் இருக்கையில், மாப்பிள்ளை இல்லாமலே நிச்சயதார்த்தம் பாக்தாத்தில் பெண் வீட்டில் எளிமையாய் நடந்து முடிந்தது. சதாம் சந்தோஷப்பட்டான். அடுத்த கணம் முகம் வாடியது.

மாப்பிள்ளை இல்லாமல் நிச்சயதார்த்தத்தை நடத்திவிடலாம். அதுபோல் மாப்பிள்ளை இல்லாமல் திருமணத்தையும் நடத்திவிட முடியுமா?



மணமகள் சாஜிதாவுடன்



நாடு திரும்பிய சதாமுக்கு வரவேற்பு



கெய்ரோவில் சட்டக்கல்லூரி மாணவனாக...

"நான் பாக்தாத்துக்குப் போய்தான் ஆகனும். பிரதமர் காசிம் உயிரோடு இருக்கிறவரை அது நடக்காது" என்று மனம் வருந்தினான். அப்போது தான் அந்த மகிழ்ச்சியான செய்தி அவனுக்குக் கிடைத்தது...

"பிரதமர் காசிம் க்ளோஸ்! முன்பு காசிமினால் சிறையிலடைக்கப்பட்டிருந்த ஆரீஃபுடன் கூட்டு சேர்ந்து நம் மறுமலர்ச்சிக்கட்சி ஈராக் ஆட்சியைப் பிடித்து விட்டது..."

அது அரண்மனை,

அங்குதான் ஈராக்கின் கடைசி மன்னரான இரண்டாம் ஃபைசலும் அவரது குடும்பத்தினரும் 1958இல் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். மன்னராட்சியை ஒழித்த அந்த புரட்சியின் நினைவாக அது "கடைசி அரண்மனை" என்று அழைக்கப்படுகிறது.

ஆரீஃப் மறுமலர்ச்சிக் கட்சியினர் கூட்டாட்சி 1963 பெப்ரவரி 8ஆம் திகதி அமைக்கப்பட்ட பிறகு -ஆரீஃப் ஜனாதிபதியான பிறகு இந்த அரண்மனை அரசியல் கைதிகளை கொடூரமான முறையில் விசாரணை செய்யும் சித்திரவதைக் கூடமாக மாற்றப்பட்டது. எகிப்திலிருந்து பாக்தாத் திரும்பிய சதாம் இந்த கூடத்தில் அரசியல் கைதிகளை விசாரணை செய்யும் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டான். அரசியல் கைதிகளிடமிருந்து உண்மையைக் கறக்கும் மிகக் கடினமான வேலை சதாமிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஈராக் அரசியல் கைதிகள் வன்முறையில் நம்பிக்கை கொண்டவர்கள். அவர்கள் லேசில் வாய் திறக்கமாட்டார்கள்.

அப்படிப்பட்ட அரசியல் கைதிகளிடமிருந்து உண்மையை வரவழைக்க அமெரிக்கா உட்பட உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் பல சித்திரவதை முறைகள் கையாளப்படுகின்றன...

சதாம் விசாரணை அதிகாரியாக இருந்த சித்திரவதைகூடமும் இதற்கு விதிவிலக்கு அல்ல...

இங்கு பிடித்து வரப்படும் ஒவ்வொரு கைதியின் கைகளும், கால்களும் கட்டப்பட்டன. உத்திரத்திலிருந்து தொங்கும் இரும்புச் சங்கிலியில் அவர்கள் தலைகீழாகக் கட்டி தொங்கவிடப்பட்டார்கள். அப்போதும் அவர்கள் வாய் திறக்க மறுத்தால் எரிச்சலில் பொறுமையிழந்த சதாம் அவர்களை கண்மண் தெரியாமல் அடித்ததும் உண்டு.

சதாமின் சித்திரவதைக்கூடத்தில் எல்லா வகையான சித்திரவதைக் கருவிகளும், வழிமுறைகளும் பயன்படுத்தப்பட்டன.

கைதிகள் அனுபவிக்கும் துயரம் எப்போதாவது சதாமின் மனசுக்குள் இடிக்கும். அப்போதெல்லாம் இவர்கள் ஆட்சியில் இப்படித்தானே என் கட்சித்தோழர்கள், என் கட்சித் தலைவர்கள், சித்திரவதைப்பட்டார்கள் என்ற எண்ணம் தோன்றும். உடனே உறுத்தல் விலகும். மனம் உறுதியாகும். முழு மூச்சுடன் தன் வேலையில் கவனம் செலுத்த ஆரம்பித்து விடுவான்.

ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டிருந்தபடி சதாமுக்கும் மாமா மகள் சாஜிதாவுக்கும் 1963இல் பாக்தாத்தில் திருமணம் நடந்தது. எளிமையான திருமண விழா, பெற்றோர்களும் உற்றார்களும், மறுமலர்ச்சிக் கட்சியின் முக்கிய தலைவர்களும் வாழ்த்தொலி எழுப்ப இனிதே நடந்தேறியது.

சதாமின் குடும்ப வாழ்க்கை தொடங்கியது... சதாமும், சாஜிதாவும் ஏற்கனவே அறிமுகமானவர்கள் என்பதாலும், நெருங்கிய உறவினர்கள் என்பதாலும் அவர்களின் குடும்பவாழ்க்கை பிணக்கின்றி அமைதியாய் நடந்தது.

திருமணத்திற்குப் பிறகும் சாஜிதா ஆசிரியப் பணியைத் தொடர்ந்தாள். எப்போதும்போல சதாம் தன் விசாரணை அதிகாரி வேலையை கவனித்து வந்தான்...

ஆனால், எதுவும் எப்போதும் சுமுகமாகவே இருந்து விடுவதில்லை!

அடுத்த சில மாதங்களில் அடுக்கடுக்காய் நடந்த சம்பவங்கள், சதாமை சிறைக்குள் தள்ளிப்பூட்டின...

இன்னும் இரும்பாகிப்போனான் அவன்!

(தொடரும்)

# தங்கநகை கடத்திய இருவர் கட்டுநாயக்காவில் கைது

(கொழும்பு)

தங்க நகைகளைச் சட்ட விரோதமாகக் கடத்த முயற்சித்த 2பேர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று முன்தினம் காலை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

1கிலோ 300 கிராம் எடையைக்கொண்ட தங்க நகைகளை இவர்கள் கடத்த முயற்சித்ததாக விமான நிலையப் பிரதி சுங்கப் பணிப்பாளர் கபில பெரேரா தெரிவித்துள்ளார். சந்தேக நபர்கள் உடம்பிலும் பொதிகளிலும் இந்நகைகளைப் பதுக்கி வைத்திருந்ததாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. நகைகளை அரசுடமையாக்கி சந்தேக நபர்களுக்கு இரண்டு இலட்சம் ரூபா அபராதம் விதித்ததாகச் சுங்கப்பகுதியினர் தெரிவித்துள்ளனர். (அ-2,9)

## யாழ்.மாவட்டத்தில் பன்முக வரவுசெலவுத்திட்டத்தின் கீழ் 552 திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

2005ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களால் யாழ்.மாவட்டத்தில் 552 திட்டங்களை மேற்கொள்வதற்கு 31 கோடி 6 இலட்சத்து 73 ஆயிரத்து 400 ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவில் 10 திட்டங்களை மேற்கொள்வதற்கு 6 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாவும் வேலணையில் 25 திட்டங்களை மேற்கொள்வதற்கு 1 கோடி 2இலட்சத்து 70 ஆயிரம் ரூபாவும் ஊர்காவற்றுறையில் 17 திட்டங்களை மேற்கொள்வதற்கு ஒரு கோடி மூன்று இலட்சத்து 85ஆயிரம் ரூபாவும் காரைநகரில் ஆறு திட்டங்களை மேற்கொள்வதற்கு 4 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் 53 திட்டங்களை மேற்கொள்வதற்கு 3 கோடி ஆறு இலட்சத்து 18ஆயிரத்து 400 ரூபாவும் நல்லூரில் 38 திட்டங்களை மேற்கொள்வதற்கு 2 கோடி 3 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாவும் வலிகாமம் தெற்கு மேற்கில் (சண்டிலிப்பாய்) 26 திட்டங்களை மேற்கொள்வதற்கு ஒரு கோடி 4 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவும் வலிகாமம் மேற்கு சங்கானையில் 74 திட்டங்களை மேற்கொள்வதற்கு3 கோடி இரண்டு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் தெற்கு உடுவிலில் 27 திட்டங்களை மேற்கொள்வதற்கு ஒரு கோடி 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் வலிகாமம் வடக்குதெல்லிப்பழையில் 24 திட்டங்களை மேற்கொள்வதற்கு 9 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாவும் வலிகாமம் கிழக்கு கோப்பாயில் 63 திட்டங்களை மேற்கொள்வதற்கு 4 கோடி 65 இலட்சம் ரூபாவும் தென்மராட்சியில் 94திட்டங்களை மேற்கொள்வதற்கு 5 கோடி 3இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவும் வடமராட்சி தெற்கு,மேற்கு கரவெட்டியில் 55 திட்டங்களை மேற்கொள்வதற்கு 2 கோடி 9 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாவும் வடமராட்சி வடக்கு பருத்தித்துறையில் 29 திட்டங்களை மேற்கொள்வதற்கு ஒரு கோடி 6 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாவும் வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் 11 திட்டங்களை மேற்கொள்வதற்கு 6 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் யாவும் இவ்வருட இறுதிக்குள்செய்து முடிக்கப்படல்வேண்டும். (அ-19)

# தமிழ் இலக்கிய விழா

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ள தமிழ் இலக்கிய விழா 2005 ஒக்டோபர் மாதம் 1,2,3ஆம் திகதிகளில் மன்னாரில் இரவு -பகல் நிகழ்ச்சியாக நடைபெறவிருக்கிறது.

காலையில் நடைபெறும் ஆய்வரங்கு "20ஆம் நூற்றாண்டின் ஈழத்து தமிழ் இலக்கியம் ஒரு மதிப்பீடு" எனும் கருப்பொருளில் இடம்பெறவுள்ளது. இவ்வாய்வரங்கில் பேராளர்களாக பங்குபற்ற விரும்பும் ஆர்வலர்கள் குறிப்பாக வடக்கு-கிழக்கைச் சேர்ந்தவர்கள் தங்களது பெயர்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுமாறு வடக்கு- கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும் ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் பெயர்களை தந்துதவுவது சிரமத்தை தவிர்க்க உதவும் என்றும் தங்குமிட வசதியும், உணவும் தம்மால் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர்புக்கு உதவிப்பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி அமைச்சு, வடக்கு-கிழக்கு மாகாணம்,திருகோணமலை. தொலைபேசி இல: 026-2220036. (அ)

# கிராம அபிவிருத்திச் சங்கம் அமைக்கக் கோரிக்கை

(மருதங்கேணி)

கற்கோவளம் கிராமத்தில் கிராம அபிவிருத்திச் சங்கம் ஒன்றை அமைத்துத்தருமாறு அப்பகுதி மக்கள் வடமராட்சி வடக்கு பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடமராட்சிப் பகுதியில் சுனாமி அனர்த்தத்தினால் மிகவும் பாதிக்கப்பட்ட கற்கோவளம் கிராமத்திற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவிகளைச் செய்ய முன்வந்த போதும் அவற்றை செயல்படுத்த ஒரு நிறுவனம் இல்லாததால் அபிவிருத்திகளை மேற்கொள்ள முடியாத நிலையில் இக்கிராமம் உள்ளது.

ஆகவே, இக்கிராமத்திற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் ஒன்றை அமைத்துத் தரும்படி வடமராட்சி பிரதேச செயலரிடம் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-35)

# இலவச வைத்திய சேவை

வடமராட்சி கிழக்கு மணற்காட்டில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச் சிரமத்தின் அனுசரணையுடன் இலவச வைத்திய சேவை வழங்கப்பட்டு வருகிறது.

வாரத்தில் பிரதி திங்கள்,வியாழன் ஆகிய நாட்களில் பி.ப 4.00 மணிக்கு அம்பன் அரசினர் மத்திய மருந்தக வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். திருச்செல்வநாயகம் இவ்வைத்திய சேவையை வழங்கி வருகிறார்.

வைத்திய சேவைக்கான மருந்துவகைகளை சோவாச்சிரமம் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-35)

இருள்சேர் இருவினையும் சேராஇறைவன்
பொருள் சேர்புகழ்புரிந்தார் மாட்டு - குறள்

வலம்புரி

## நசுக்கும் எண்ணம் இருக்கும் வரை குண்டு வெடிப்புக்களும் இருக்கவே செய்யும்

இலண்டனில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் உலகநாடுகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

மனித சமூகம் விஞ்ஞான தொழிநுட்பத்தில் அதீதவளர்ச்சியை அடைந்து செல்லும் அதே நேரம் மனித நேயத்துடன் வாழும் வகையை மறந்து செல்வது வேதனைக்குரியதாகும்.

மனிதன் மனிதனை மதிக்கும் பண்பை என்று இழந்து விடுகின்றானோ அன்றே அவனது வாழ்வியலும் கேள்விக்குறியாகி விடுகின்றது.

இந்த உண்மை உணரப்படாமல் இருக்கின்ற வரை உலகம் முழுவதிலும் யுத்தத்தின் அடையாளங்கள் இருக்கவே செய்யும். ஒரு காலத்தில் உலகம் முழுவதையும் தனது கைக்குள் வைத்திருக்க ஆசைப்பட்ட பிரிட்டன் தனது ஆசையை நிறைவேற்றிக் கொண்டாலும் அதற்காக இழந்ததை ஏராளம் என்பதே உண்மை.

இழந்தவற்றுடன் பிரிட்டனின் இலட்சியம் நிறைவடைந்து விட்டது என்றால் அதுதான் இல்லை. பிரிட்டனின் குடியாட்சிக்குள் இருந்த நாடுகள் விடுதலைபெற்ற போதிலும் அந்த விடுதலை அர்த்தமற்றதாகவே இருக்கிறது.

குறிப்பாக இலங்கையை எடுத்துக்கொண்டால் அந்த உண்மையை புரிந்துகொள்ளலாம். பிரிட்டனின் குடிஆட்சிக்குள் இருந்த இலங்கைக்கு 1948 களில் சுதந்திரம் வழங்கியபோது பெரும்பான்மையின் கைகளில் நாட்டை திணித்துவிட்டு பிரிட்டிஷார் வெளியேறினர்.

நாட்டை யாரிடம் ஒப்படைக்கின்றோம், அந்த நாட்டில் உள்ள சிறுபான்மையினரின் உரிமைகள் எவ்வாறு கவனிக்கப்படும், என்பது பற்றி எந்த சிந்தனையும் இன்றி, தம்மோடு கூடிக்குலாவியிருந்தவர்களிடம் நாட்டைக் கொடுத்துவிட்டதன் பெறுபேறே இலங்கையின் இன்றைய நிலையாகும்.

இது மட்டுமன்றி பிரிட்டனின் ஆட்சிக்குள் இருந்து விடுதலைபெற்ற நாடுகளில் இன்று வரை உள் நாட்டுக் கலவரங்கள் நடைபெற்று வருவதையும் நாம் காணமுடிகின்றது.

உலகம் முழுவதையும் தமது கரங்களுக்குள் அடக்கி அந்த நாடுகளின் பொருளாதாரத்தை பிளிந்து எடுத்துவிட வேண்டுமென்பதே பிரிட்டனின் நோக்கம்.

அந்தநோக்கம் நிறைவேறியதும் வெறும் சக்கைப்பொருளாதாரத்துடனேயே குடியேற்ற நாடுகளுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டது.

இதனால் அந்த நாடுகள் வளர்முக நாடுகள் என்ற வகுதிக்குள் வறுமை, வேலையின்மை, யுத்தமென்ற நோய்களுக்குள் சிக்குண்டு சின்னாபின்னப்படுகின்றன.

உலக நாடுகளை குடியேற்ற ஆட்சிக்குள் வைத்திருக்க விரும்பிய பிரிட்டன் பிற்காலத்திலும் திருந்தியதாக இல்லை. தனது வல்லாமையை நிலைநாட்டுவதிலேயே அது கண்ணும் கருத்துமாக செயற்படுகின்றது.

அமெரிக்காவுடன் இணைந்துகொண்டு அமெரிக்கா செய்வதெல்லாம் சரியென்றவாறு துரியோதனுக்கு உதவும் துச்சாதனன்போல பிரிட்டன் செயற்பட்டது. இதன் விளைவாகவே அங்கு இடம்பெற்ற குண்டு வெடிப்பை எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஈராக் மீது நியாயமற்ற முறையில் போர்தொடுத்த -இல்லை இல்லை ஈராக் மீது குண்டுபோட்டு அந்த நாட்டை சின்னாபின்னமாக்கிய அமெரிக்காவுக்கு புத்திமதி கூறி, ஈராக் மக்களின் வாழ்வியலை அழிக்க வேண்டாம் எனக் கூறாமல்,

அமெரிக்காவுக்குப் பின்னால் தானும் சென்று ஈராக்கை அழித்த பிரிட்டன் இன்று குண்டுவெடிப்பால் அதிர்ந்து போயுள்ளது.

மற்றைய நாட்டில் தனது குண்டு வெடிக்கலாம் அந்தக் குண்டு தனது நாட்டில் வெடித்தால் அது பயங்கரவாதம். எனில் இனிவரும் காலங்களில் குண்டு வெடிக்கும் இடங்களாக பிரிட்டனும் அமெரிக்காவுமே தெரிவுசெய்யப்படும்.

# சுனாமி நிவாரண சபை பற்றிய ஜனாதிபதியின் விளக்கம்

(கொழும்பு)

சுனாமி நிவாரண சபையின் கீழ் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எந்த வித அதிகாரமும் வழங்கப்படவில்லை என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வலியுறுத்தியுள்ளார்.

'அது வடக்கு- கிழக்கில் புனரமைப்பு, புனர்வாழ்வு நடவடிக்கைகளை சீராக அமுல்செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட நிர்வாக அமைப்பு மாத்திரமேயாகும். இந்த சபையின் கீழ் விடுதலைப் புலிகளுக்கு அந்தப் பிராந்தியத்தில் எந்தவித இராணுவ பாதுகாப்பு அதிகாரங்களும் வழங்கப்படவில்லை'

சுனாமி நிவாரண சபை தொடர்பாக இராணுவ மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தவென பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விசேட கூட்டத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

உடன்படிக்கை ஆவணத்தில் நாட்டின் இறைமை, பிரதேச ஒருமைப்பாடு என்பனவற்றிற்கு பூரண உத்தரவாதம் காணப்படுகின்றது.

நாட்டின் சட்டமும் ஒழுங்கும் நிலை நாட்டப்பட்டு அதன்மூலம் சமாதான வழிமுறைகள் முன்னெடுத்துச் செல்லப்படுவதை உறுதிப்படுத்துவது இராணுவத்தினதும் பாதுகாப்புப் படைகளினதும் பொறுப்பாகும்.

சுனாமி நிவாரண சபையில் காணப்படும் குறைபாடுகளை நீக்குவதற்கு விடுதலைப் புலிகளிடம் அரசாங்கம் தொடர்ந்தும் பேச்சுக்களில் ஈடுபட்டு வருகின்றது.

இந்த சபை ஆவணத்தின் திருத்தங்கள் தொடர்பாக விடுதலைப் புலிகள் எதுவித அதிருப்தியையும் தெரிவிக்கவில்லை. அத்துடன் சர்வதேச சமூகமும் இந்த செயற்பாட்டிற்கு பூரண ஆதரவு தெரிவித்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

(து-4)

# அந்தமானில் 340 முறை நில நடுக்கம்! புவிநிலத்தட்டுக்களின் உராய்வே காரணம்!!

(போர்ட் பிளேர்)

கடந்த ஆண்டு நிகழ்ந்த சுனாமிப் பேரலை தாக்குதலுக்குப் பின் 340 தடவைகள் அந்தமான் நிக்கோபாரில் நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு டிசம்பர் 26ஆம் திகதி இந்தோனேசியா அருகில் ஏற்பட்ட நில நடுக்கமும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட சுனாமிப் பேரலைகள் தாக்குதல் காரணமாக இந்தோனேசியா, இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளில் இலட்சக் கணக்கான மக்கள் உயிரிழந்தனர்.

மும்பை ஐ.ஐ.டி.யைச் சேர்ந்த புவி அமைப்பியல் வல்லுநரும், இந்திய- இத்தாலி ஆய்வுக்குழுவின் உறுப்பினருமான டொர்னாடுலா சந்திரசேகரம் தற்போது ஏற்பட்டுவரும் நில நடுக்கங்கள் குறித்து கூறியதாவது, சுனாமிப் பேரலைகள் தாக்குதலுக்குப் பின்னர் தொடர்ந்து இதுவரை 340ற்கும் மேற்பட்ட நிலநடுக்கங்கள் அந்தமான்- நிக்கோபார் தீவுகளைத் தாக்கியுள்ளன. அதில் சில நிலநடுக்கங்கள் 7.2ரிக்டர் அளவையும் தாண்டியுள்ளன. கடந்த 24ஆம் திகதி ஏற்பட்ட நில நடுக்கம் கூட இதே ரிக்டர் அளவில்தான் இருந்தது.

அந்தமான்-நிக்கோபார் தீவுகள் நிர்வாகம் ஏற்கனவே இது குறித்து எச்சரித்துள்ளதால் இம்முறை உயிர்ச்சேதமோ, பொருட்சேதமோ ஏற்படவில்லை. ஆனாலும் இம்முறை ஏற்பட்ட நில நடுக்கம் தீவுவாசிகளிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. பூமிக்கடியில் உள்ள புவி நிலத்தட்டுகள் ஒன்றுடன் ஒன்று உரசுவதாலும் பூமிக்கு அடியில் உள்ள எரிமலைகள் அடிக்கடி குமுறுவதாலும் இதுபோன்ற நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றன.

கடந்த 24ஆம் திகதி அந்தமான்- நிக்கோபார் தீவுகளில் காலை 7.47 மணியளவில் 5.3 ரிக்டர் அளவும், 8.56 மணியளவில் 5.7 ரிக்டர் அளவும் நில நடுக்கம் பதிவானது. பின்னர் மாலை 6.14 மணியளவில் 5.3 ரிக்டர் அளவு பதிவானது.தற்போது ஏற்பட்டுவரும் தொடர் நில நடுக்கத்திற்குக் காரணம் இந்தோனேசியா, யாவா,சுமத்திரா தீவிலிருந்து அந்தமான்-நிக்கோபார் தீவுகளின் வடக்குக் கடற்கரை வரை பரவியுள்ள பூமிக்கடியில் உள்ள தொடர் எரிமலைகள் தற்போது உயிர்பெற்றுள்ளன.

இந்த எரிமலைகள் குமுறும்போது ஏற்படும் தாக்கம் காரணமாகவே இப் பகுதிகளில் நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றன.

இந்தியாவில் உள்ள ஒரே எரிமலை அந்தமானில் ஆள் வசிக்காத தீவில் உள்ள எரிமலையே. இந்த எரிமலை சமீபத்தில் குமுறத் தொடங்கியது. இது வட பகுதியில் உள்ள எரிமலைத் தொடரில் உள்ள கடைசி எரிமலை. இப் பகுதியில் ஏறக்குறைய 6 எரிமலைகள் உயிர் பெற்றுள்ளன. சமீபத்தில் நடத்தப்பட்ட ஆய்வில் எரிமலைப் பகுதியில் தொடர்ந்து 'மக்மா' பாறைக் குளம்புகள் தொடர்ந்து வெளியேறி வருவதன் மூலமாகவே நிலநடுக்கம் உணரப்படுகின்றது.

மக்மா பாறைக் குளம்புகள் 100 முதல் 200கிலோ மீற்றர் ஆழத்தில் இருந்து மேல் நோக்கி சீறி எழுவது வழக்கம். இனிவரும் நாட்களில் நிலநடுக்கங்கள் ஏற்படாது என்று சொல்வதற்கில்லை. இவ்வாறு சந்திரசேகரம் கூறினார்.

(ற)

## 24 கடவுச் சீட்டுக்களுடன் கைதான நபருக்கு 24 வருட கடூழியச் சிறை!

(கொழும்பு)

24 கடவுச் சீட்டுக்களை வைத்திருந்த ஒரு நபருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் கடும் தண்டனை விதித்துள்ளது.

கொழும்புப் பிரதம நீதவான் சறோஜினி குசலா விஜயவர்த்தன இந்த நபருக்கு 24 வருடகாலக் கடுழியச் சிறைத் தண்டனையும் 12 இலட்சம் ரூபா அபராதமும் விதித்துள்ளார்.

ஹோமாகமவைச் சோந்த றஞ்சன் காமினி சில்வா என்ற நபருக்கே இத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2002 ஆம் ஆண்டு கடவுச் சீட்டுத் தொடர்பாக நடத்தப்பட்ட தேடுதலின் போது சி.ஐ.டி.யினர் இவரைக் கைது செய்தனர்.

குடிவரவு, குடியகல்வுச் சட்டத்தின் பிரகாரமே இவருக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. (ற-2)



சாயி அருளமுதம்

பகவானின் நாமத்தைப் பாடி அவருடைய திருவுருவைப் போற்றும் போது நீங்கள் பெறக்கூடிய ஆனந்தத்தில் வாழுங்கள். அதுவே எனக்கு உணவும், என்னைத் தாபரிப்பதுமாகும். ஆகவே நான் உங்களுடன் பேச வேண்டிய தேவையில்லை. நீங்கள் பஜனை செய்யும் போது உங்களால் உணரப்படும் ஆனந்தத்தை இங்கே இருந்தபடியே நான் உள்ளிழுத்துக் கொள்வது எனக்குப் போதுமானதாகும்.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

## கலாபூஷண விருது

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வருடந்தோறும் வழங்கப்பட்டுவரும் ''கலாபூஷணம்'' விருதுக்கென தகைமை மிக்க தமிழ்க்கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

ஏற்கனவே விண்ணப்பங்கள் பல கிடைத்துள்ள போதிலும் நாடளாவிய ரீதியில் பரந்துபட்ட வகையில் விருதுக்கான தமிழ்க் கலைஞர்களை தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, இந்துசமய அலுவல்கள் அமைச்சரும் மற்றும் கல்வி வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக்கு உதவும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் எண்ணத்துக்கமைய விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் கால வரையறை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

சிற்பம்,ஓவியம், நடனம்,வாய்ப்பாட்டு,தவில்,நாதஸ்வரம்,நாடகம், சினிமா,நாட்டுப்புறவியல், இலக்கியம், ஊடகத்துறை போன்ற பல்வேறு துறைசார்ந்த 60 வயதிற்கு மேற்பட்ட தமிழ்க்கலைஞர்கள் இவ் விருதுக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும்.

கலாபூஷணம் விருதுக்கான விண்ணப்பப்படிவங்கள் மாவட்ட செயலகங்களின் மூலம் விநியோகிக்கப்பட்டு வருவதுடன், விண்ணப்பங்கள் பூர்த்திசெய்யப்பட்டு மாவட்ட அரசாங்க அதிபரின் ஊடாக அவரது உறுதிப்படுத்தலுடன் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 31ஆம் திகதிக்கு முன்பதாக பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இல. 248 1/1 காலி வீதி,கொழும்பு -04 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

(அ-9)

## நியாப் II திட்டத்தின் கீழ் 25 கிராமங்கள் அபிவிருத்தி

நியாப் II திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் 25 கிராமங்கள் அபிவிருத்தி செய்வதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இக் கிராம அபிவிருத்தித் திட்டங்கள் அக் கிராமங்களின் முழுமையான அபிவிருத்தித் திட்டமாக கிராம மக்களின் பங்களிப்புடன் தயாரிக்கப்பட்டு வருகிறது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷின் வேண்டுகோளுக்கிணங்க இத் திட்டத்தினைத் தயாரிக்கும் செயற்பாடுகளை இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் முடிப்பதற்கான நடவடிக்கையில் பிரதேச செயலர்கள் ஈடுபட்டு வருகின்றார்கள்.

(அ-19)

# கொழும்பில் தற்கொலை குண்டுதாரிகள் புலனாய்வுத்துறை பொலிஸுக்கு அறிக்கை

(கொழும்பு)

இராணுவ அதிகாரியை அல்லது புலனாய்வுப்பிரிவு அதிகாரியை இலக்குவைத்து மூன்று தற்கொலைக் குண்டுதாரிகள் கொழும்பிற்குள் ஊடுருவியிருப்பதாக புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இம் மூவரும் மட்டக்களப்பில் இருந்து கொழும்பிற்கு வந்திருப்பதாக புலனாய்வுத் துறைத்தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது பற்றி அறிக்கை பொலிஸ்மா அதிபருக்கும் கையளிக்கப்பட்டதாகவும் அதனையடுத்து அம்மூவர் குறித்தும் விழிப்புடன் இருக்குமாறு கொழும்பிலும் கொழும்பை அண்டிய பிரதேசத்திலும் உள்ள பொலிஸ்நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

கொழும்பிற்கு வந்துள்ள இம்மூவரில் ஒருவருக்கு அவரின்இலக்கை அடைவதற்காக மோட்டார் சைக்கிள் ஒன்று வழங்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

குண்டு பொருத்தப்பட்ட இந்தமோட்டார் சைக்கிளில் சென்று பாதுகாப்பு அதிகாரி பயணிக்கும் வாகனத்துடன் மோதுவதே இவரின் திட்டமாகும்.

இந்ததற்கொலை தாரிக்கு உதவுவதற்கே ஏனைய இருவரும் வந்துள்ளதாகவும் பாதுகாப்பு அதிகாரிகள் குறித்து தகவல் அறிவது இவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் பொறுப்பு என்றும் புலனாய்வுத்துறையினர் தெரிவித்துள்ளதாக அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-4)

# உயர் தொழிநுட்ப நிறுவன பழைய மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண உயர் தொழிநுட்ப நிறுவனத்தின் கல்வி கற்றுவெளியேறிய அனைத்து கற்கை நெறிமாணவர்களையும் எதிர்வரும் 31ஆம் திகதி காலை 10.30மணிக்கு உயர் தொழிநுட்ப நிறுவத்தில் ஒன்று கூடுமாறு யாழ்ப்பாண உயர்தொழிநுட்ப நிறுவன பழையமாணவர் சங்கச்செயலாளர் வி.தயாபரன் கேட்டுள்ளார்.

இக்கலந்துரையாடலில் கல்வி கற்று வெளியேறிய மாணவர்களது பட்டமளிப்பு மற்றும் முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளது. (ச)

# இன்று பவளவிழா

சிவாச்சாரிய குருமணி சிவஸ்ரீ நா.யோகீஸ்வரக் குருக்கள் ஸ்ரீமதி யோ. சுவதாம்பிகை அம்மா தம்பதிகளின் பவள விழா இன்று நடைபெறவுள்ளது.



இந்து மத குருபீடாதிபதி சிவஸ்ரீ ச. மகேஸ்வரக்குருக்களின் தலைமையில் இன்று பிற்பகல் 2.30மணிக்கு அத்தியடி பிள்ளையார் ஆலய கலாசார மண்டபத்தில் நடைபெறும் பவளவிழாவில் சிவாச்சாரிய தம்பதிகள் கௌரவிக்கப்படவுள்ளனர். (ந)

## மட்டு.கல்வியியற் கல்லூரியில் பயிலும்
# புத்தூர் மாணவனை காணவில்லை என மனிதஉரிமை ஆணைக்குழுவில் முறைப்பீடு

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு தேசியகல்வியியற் கல்லூரியில் கல்வியியலும் புத்தூரைச்சேர்ந்த மாணவன் ஒருவரைக் காணவில்லை என இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது.

புத்தூர் நவக்கிரியைச் சேர்ந்த குணரட்ணம் ராஜதீபன் என்பவரையே காணவில்லை என அவரது சகோதரன் மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளார்.

மட்டக்களப்பு தேசிய கல்வியியற்கல்லூரியில் கல்வி பயின்று வரும் மேற்படி மாணவன் தனது வீட்டில் நடைபெற்ற விழா ஒன்றில் கலந்துகொள்வதற்காக கடந்த 9ஆம் திகதி தனது வீட்டிற்கு வந்துள்ளார்.

பின்னர் கடந்த 18ஆம் திகதி கல்வியியற்கல்லூரிக்குச் செல்வதாக கூறிச்சென்றதாகவும் ஆனால் அங்கு அவர் சமூகம் தரவில்லை என மட்டக்களப்பு தேசியகல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி தமக்கு தகவல் தெரிவித்ததாகவும் அவரது சகோதரனின் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-19)

# அரசுடன் எந்தவிதமான சமரசத்திற்கும் இடமில்லை
## ஐ.தே.க பொதுச்செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிஅமைக்குமே தவிர ஜனாதிபதி சந்திரிகாவுடன் பொது உடன்பாட்டிற்கு வருதற்கான எவ்வித எண்ணப்பாடும் தமக்கு இல்லை என ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச்செயலர் திஸஅத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும்தெரிவித்ததாவது, நாம் தற்போது தொகுதி மறுசீரமைப்புப்பணிகளை மேற்கொண்டு வருகிறோம். எந்தவொரு தேர்தலை எதிர்கொள்ளவும் எமது கட்சி தயாராகவே உள்ளது.

மேலும் ஐக்கியதேசியக்கட்சியின் அமைச்சர்களை நியமிக்கும் வகையில் 99சதவீதமான வேலைத்திட்டங்கள் முடிவடைந்துள்ளது எனவும் அவர்குறிப்பிட்டுள்ளார்.இம்முறை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமதுகட்சியே வெல்லுமென அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ற)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் தொழிலநுட்ப அலுவல்கள் சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று வியாழக்கிழமை 5.30 மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளதால் சகல நிர்வாகசபை உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் க.சத்தியபாலன் கேட்டுள்ளார். (அ)

# விவசாய அமைச்சராக ரட்ணசிறி

விவசாயத்துறை அமைச்சராக ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியமித்துள்ளார். நேற்று முதல் அமுலுக்குவரும் வகையில் ஜனாதிபதி இந்நியமனத்தை வழங்கியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மூத்த உறுப்பினரான இவர் ஏற்கனவே பாதுகாப்பு, சட்ட ஒழுங்கு தொடர்பான அமைச்சராகவும், புத்தசாசன மற்றும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகவும் கடமையாற்றிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-4)

# இராணுவம் உடனடியாக...

ஜனநாயக வழியில் அமைந்த எந்தவொருதீர்வுக்குமான கதவுகளையும் முற்றாக மூடியுள்ளது.இந்நிலையில் தமிழர் தாயகத்தில் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் தமிழ்பேசும் மக்களாகிய நாம் இன்று அடைந்துள்ள அவலமானதும் ஆபத்தானதுமான நிலையை சர்வதேச சமூகத்தின் முன்னால் வெளிப்படுத்தி எமக்கான நியாயத்தையும் அங்கீகாரத்தையும் கோருகின்றோம்.

ஆயுதம் தாங்கி எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க நிர்ப்பந்திக்கப்பட்ட நாம் தமிழ் மண்ணையும் தமிழ் பேசும் மக்களையும் ஆழமாக நேசிக்கும் ஆற்றல் மிகுந்த சிறந்த ஒரு தேசியத் தலைவரையும் ஒரு மரபுவழிப் போரை நடத்தவல்ல படையணிகளையும் கண்டு நிமிர்ந்தெழுந்தோம். இதன்மூலம் இலங்கைத்தீவில் ஒரு தனித்தேசிய இனமாகத் தமிழ்மக்கள் நாம் வாழ்ந்து வருகின்றோம் என்னும் உண்மையை உலக அரங்கில் ஓங்கி ஒலித்தோம். இப்போராட்ட காலத்தில் சிங்கள ஆட்சியாளர்களுடன் நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் போதும் தமிழர் தரப்பால் முன்வைக்கப்பட்ட நியாயமான கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன.

வேறு வழியின்றியும் சர்வதேச அழுத்தம் காரணமாகவும் சிறிலங்கா அரசாங்கம் தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகளாகிய தமிழீழ விடுதலைப்புலிகளுடன் யுத்தநிறுத்த உடன்பாடு செய்ய முன்வந்தது. அதன்படி 22.02.2002ஆம் நாளில் நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையுடன் சிறிலங்காவின் பிரதமர் திரு. ரணில் விக்கிரமசிங்க அவர்களும் தமிழீழத் தேசியத் தலைவர் திரு.வேபிரபாகரன் அவர்களும் கையொப்பமிட்டு ஒரு யுத்தநிறுத்த உடன்படிக்கை செய்யப்பட்டது.

இவ்வாறாக கடந்த மூன்றரை ஆண்டுகளாய் தமிழ் மக்களின் இயல்பு வாழ்வுக்கான எதிர்பார்ப்புகள் யாவும் பொய்த்துப் போய்விட்டன. சிறிலங்காப் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் வளம்நிறைந்த எமது சொந்தநிலங்களும் செல்வம் கொழிக்கும் எமது கடல் வளமும் மக்களிடமிருந்து பறிக்கப்பட்டு உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் முடக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ்பேசும் மக்களுக்கு நியாயமான எந்தவொரு தீர்வையும் முன்னெடுக்க மாட்டார்கள் என்பதை நாம் மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்திக் கொள்கின்றோம். இந்த உண்மைகளை சர்வதேச சமூகமும் யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கால நடவடிக்கைகள் மூலம் புரிந்துகொண்டிருக்கும் என்பதையும் நாம் உணர்ந்து கொள்கின்றோம்.

இந்த உண்மை நிலையின் காரணத்தினால் நாம் தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டியவர்களாகச் சிங்கள பௌத்த பேரினவாதத்தால் நிர்ப்பந்திக்கப்படுகின்றோம். எனவே எமது தாயக நிலத்தையும் கடலையும் ஆக்கிரமித்து நிற்கும் சிறிலங்கா இராணுவம் எமது மண்ணை, கடலை விட்டு உடனடியாக வெளியேறவேண்டும் என்றும்,

எமது நிலத்தில், எமது பலத்தில் எமது தலை விதியை நாமே நிர்ணயித்துக் கொள்ளும் சூழ்நிலை உருவாக வேண்டும் என்றும்,அந்த உன்னதமான உயரிய சுதந்திர வாழ்வை நோக்கி தமிழ் மக்கள் அணி திரண்டபடியே உள்ளோம் என்பதையும் இவ் எழுச்சிப் பிரகடனத்தின் மூலம் முன்வைக்கும் அதேவேளை,

தமிழ் பேசும் மக்களாகிய எமது அடிப்படை வாழ்வுரிமையையும் சுதந்திர வாழ்வையும் ஏற்றுக்கொண்டு எமது மரபுவழித் தாயகம், தேசிய இனம், தன்னாட்சி என்பவற்றின் அடிப்படையில் எம்மையும் எமது இறைமைக்கான போராட்டத்தையும் அங்கீகரிக்க வேண்டுமென்று சர்வதேச சமூகத்தை நாம்கோருகின்றோம். (ச-4.2.8)

# தபால்...

வாக்களிப்பிற்கான விண்ணப்பப் படிவம் என்ற தலைப்பில் அச்சடிக்கப்படடுள்ள இவ் விண்ணப்ப பத்திரத்தில் தேர்தலுக்கான காலம் எதுவும் குறிப்பிடப் படவில்லை என்றும் நம்பகமான தகவல்கள் தெரிவித்துள்ளன. (ச-4)

# எழுச்சியுடன் நடைபெற்ற...

தமிழீழ தேசியக் கொடியை கப்டன் மில்லரின் தந்தையார் ஏற்றிவைத்தார். பொதுச்சுடரினை தமிழீழத்தின் அனைத்துப் பிரதேசத்தின் பிரதிநிதிகளும் ஏற்றினர். தொடர்ந்து சர்வமதத் தலைவர்களின் ஆசியுரை நடைபெற்றது.

பின்னர் தமிழ்மக்களின் கல்விப் புறக்கணிப்புத் தொடர்பான கட்டுரையை முதலில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகத் தலைவர் நந்தகுமார் சமர்ப்பித்தார். அதனைத் தொடர்ந்து வவுனியா மாநாட்டின் பொதுப் பிரகடனம் வாசிக்கப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் கா.வே.பாலகுமாரன், தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி, யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன், மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இனியவன், வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம், தேசிய எழுச்சிப் பேரவையின் பொறுப்பாளர் சஞ்சை, மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெரியசாமி சந்திரசேகரன், மேல்மாகாண மக்கள் முன்னணி மனோகணேசன், மன்னார் மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

நிகழ்வில் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் சிறப்புரைகள் இடம்பெற்றது. (ச)

# கொழும்பில்...

சென்றுள்ளதாகவும், கழுத்துப்பகுதியில் சூட்டுக்கு இலக்கான பிரஸ்தாப இளைஞனை உடனடியாக கொழும்பு தேசியவைத்தியசாலைக்கு கொண்டு சென்று அனுமதித்தபோது அங்கு சிகிச்சை பயனளிக்காமையினால் அவர் உயிரிழந்துள்ளார். (ச-4,2)












இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.07.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.